பொதுசன நூலகம்
ஆவணத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 21 திங்கட்கிழமை (04.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 187

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/638)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## ஜனாதிபதி மகிந்த தாயகம் திரும்பினார்



(கொழும்பு)

மும்பையில் இந்திய இலங்கை அணிகளுக்கு இடையே நேற்றுமுன் தினம் இடம்பெற்ற 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியை பார்வையிடச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த தமிழர்கள் நாடு திரும்ப ஆர்வம்

### இது யு.என்.எச்.சி.ஆர். தரும் தகவல்

(கொழும்பு)

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து 2 வருடங்களான நிலையில், இடம்பெயர்ந்த மக்கள் மீள குடியேறுவதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் தூதுவராலயம் தெரிவித்துள்ளது..

இந்த வருட முதல் மாத காலப்பகுதியினுள் 597 பேர் அகதிகள் தூதுவராலயத்தின் உதவியுடன் தமது முன்னைய இருப்பிடங்களுக்குச் சென்றுள்ளதாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

UNHCR
The UN Refugee Agency

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய 19 பேர் கைது

### தமிழகப் பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழகத்தின் கோயம்புத்தூர் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய ம.தி.மு.க. தொண்டர்கள் 19 பேர் தமிழகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி (11 ஆம் பக்கம் பார்க்க)

# தனிமையில் வாழும் முதியவர்கள் நலன்பேண விசேட திட்டம் வேண்டும்

### அரசின் கவனத்தை ஈர்க்க முயற்சி



(கொழும்பு)

நீண்டகால யுத்தத்தினாலும் இடப்பெயர்வுகளினாலும் உறவுகளைப் பறிகொடுத்து தனித்துப்போன முதியவர்கள் தொடர்பாகவும் அவர்களின் நலன்களைப் பேணும் முகமாகவும் விசேட செயற்திட்டங்கள் அமுல்செய்யப்படவேண்டும் என்று தொண்டு நிறுவனங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

வடக்கில் தற்போது இடம்பெற்று வரும் மீள் குடியேற்றங்களின் பின்னர் தாங்கள் ஒதுக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாக வயது முதிர்ந்தவர்கள் உணருவதாகவும் இவர்களுக்கு மருத்துவப் பராமரிப்பு அவசியம் தேவையாக இருப்பதாகவும் IRIN இணையத்தளம் தெரிவித்துள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு தார்மீக ஆதரவு; இது ரணிலின் புதிய அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜுன் மாதத்திற்குமுன் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் உத்தரவாதமளித்தால் அரசாங்கத்திற்குத் தான் முழுமையான ஆதரவளிக்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பஸ்ஸரயில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். பாதுகாப்புப் (11 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் இராணுவத்தினருக்கு தண்ணி காட்டிய 'இரவுப் பறவைகள்'

### ஈராக்கில் சிக்கித் தவிக்கும் ஓய்வுபெற்ற சிப்பாய்கள்

(கொழும்பு)

தங்களைப் பணிக்கு அமர்த்தியவர் கடந்த 16 மாதங்களாக ஊதியம் வழங்காமையினால் தாங்கள் ஈராக்கின் குக் கிராமமொன்றில் சிக்கியிருப்பதாக இலங்கையின் முன்னாள் இராணுவத்தினர் குழுவொன்று கூறுகிறது.

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்திலிருந்து 600 - 700 கி.மீ தொலைவிலுள்ள அல் அமார என்ற லெபனான் நாட்டினைச் சேர்ந்த கட்டுமான நிறுவனத்தின் பாதுகாப்பு பணியாளார்களாக தாங்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்ததாக அங்கு பணியாற்றும் இலங்கையின் 41 முன்னாள் இராணுவத்தினரைக் கொண்ட இந்தக் குழுவில் ஒருவரான லலித் குமார டீ சில்வா கூறுகிறார்.

குறிப்பிட்ட இந்த நிறுவனத்தில் ஏற்கனவே பணியாற்றிய இன்னொரு இலங்கையர் ஊடாக தாங்கள் ஈராக்கில் பணிசெய்வதற்கான பணி நுழைவிசைவினைப் பெற்றிருந்ததாக இவர் கூறுகிறார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் வர்த்தக முதலீடு வட அயர்லாந்து ஆர்வம்

(கொழும்பு)

வட அயர்லாந்தைச் சேர்ந்த வர்த்தக குழுவொன்று இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

வட அயர்லாந்தில் இருந்து வருகை தந்துள்ள இந்த முதலாவது வர்த்தகக் குழுவில் 13 நிறுவனங்களும், இரண்டு பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

இலங்கையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இவர்கள் இலங்கை அரசாங்கத்துடனும், வர்த்தக சமூகத்துடனும் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாளை இவர்கள் இலங்கையில் முதலீடு செய்வது குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்றங்களின் திருத்தச் சட்டமூலம்

### நாளை நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் நாளை நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் தினேஸ் குணவரத்தன தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் கடந்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், அன்றைய தினம் பிற்போடப்பட்ட விவாதமே நாளை மீண்டும் இடம்பெறவுள்ளது.

திருத்தப்பட்ட உள்ளூராட்சி சபை சட்டமூலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் விகிதாசார (11 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைக்கு எதிராக நடவடிக்கை தவறினால் போராட்டம் வெடிக்கும்

### அமைச்சர் தொண்டமான் போர்க்கொடி

(கொழும்பு)

ஹட்டனில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பல் மீது பொலிசார் நடவடிக்கை எடுக்கத் தவறினால் மலையகத்தில் கதவடைப்புப் போராட்டம் நடத்தப் போவதாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதிய உலகக் கிண்ண இறுதிப் போட்டியினைத் தொடர்ந்து ஹட்டனில் தமிழர்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குள் புகுந்து கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

சமநலகம, ஹிஜ்ராபுர பிரதேசங்களில் பல வீடுகள் இதனால் சேதமடைந்துள்ளன. சம்பவத்தில் காயமடைந்த மூன்று இளைஞர்கள் டிக்கோயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் பட்டாசு வெடிகளை வீடுகளுக்குள் கொளுத்தி வீசி விட்டுப் பின்னர் உட்புகுந்து தாக்குதலிலும் ஈடுபட்டதாக இலங்கைத் தொழிலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# பழைய இரும்புகளை அனுப்ப அனுமதி பெற்றுத்தருமாறு அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சேகரிக் கப்படும் பழைய இரும்புகளை தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுத்தருமாறு மீள் குடியேறிய பழைய இரும்பு வியாபாரிகள் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 31ஆம் திகதி சங்கத்தின் குழுவினரின் சந்திப்பில் இந்த கோரிக்கையை முன்வைத்து மகஜரை கையளித்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, மிகுந்த பொருளாதார கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ள வியாபாரிகளான தாங்கள் யாழ்ப்பாணத்தில் பலபாகங்களிலும் இருந்து பழைய இரும்புகளை விலைக்கு கொள்வனவு செய்துள்ளோம். அவற்றை மாற்றுபொருளாக்குவதற்காக தென் பகுதிக்கு அனுப்பிவந்தோம். தற்போது பாதுகாப்பு அனுமதி பெற்றே இரும்புகளை தென்பகுதிக்கு எடுத்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் எமது பழைய இரும்புகளை தென்பகுதிக்கு அனுப்ப முடியாது உள்ளது. இதனால் கணிசமான அளவு இரும்பை கொள்வனவு செய்துள்ள வியாபாரிகள் அவற்றை விற்க முடியாத நிலையில் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் நீண்டநாள்களாக பழைய இரும்புகளை சேகரித்துவைப்பதால் அவை சேதமடைந்து வருகிறது. இதனால் பெரிதும் நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே இது போன்ற காரணங்களால் பாதிப்புறும் தாங்கள் சேகரித்த பழைய இரும்புகளை தென்பகுதிக்கு அனுப்புவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுதருவதற்கு ஆவனசெய்யவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கா)

# மானிய உரம் கடத்தல் அம்பாறையில் ஒருவர் கைது

அம்பாறை அக்கரைப்பற்றில் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட உரவகைகளை சட்டவிரோத மான முறையில் கடத்தி சென்ற ஒருவரை நேற்று முன்தினமிரவு அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 80 உரப்பைகளும் லொறி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். விவசாயிகளுக்கு மானியஅடிப்படையில் வழங்கப்பட்ட உரவகைகளை அக்கரைப்பற்றில் இருந்து கல்முனைக்கு லொறி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் 80 உரமூடைகளில் இரவு 8.45 மணியளவில் கடத்தி செல்லவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து ஒலுவில் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# மாத்தளையில் வீதி விபத்து ஊடகவியலாளர் அறுவர் காயம்

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தின் கலீவல என்ற இடத்தில் இடம்பெற்ற விபத்தில் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் தயாரிப்பாளர் உட்பட ஆறு ஊடகவியலாளர்கள் காயமடைந்துள்ளனர்.

யாழ் குடா நாட்டில் ஊடக வேலைகளை முடித்து விட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்புகையிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வான் தொலைபேசிக்கம்பத்துடன் மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.காயமடைந்தவர்களை அப்பகுதி மக்கள் மீட்டு அருகிலுள்ள கலீவல வைத்தியசாலையில் அனுமதித்திருக்கிறார்கள். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# பாற்சோறு பொங்கலுடன் விளைநெல் வெளியீட்டுவிழா

## அனுராதபுரத்தில் கோலாகலம்

(அனுராதபுரம்)

விளைந்த நெல்லை வெளியிடும் வருடாந்த நிகழ்வு 43 ஆவது முறையாகவும், ஜயசிறி மகாபோதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விளைந்த புதிய நெல்லை ஏந்திய வண்ணம் சம்பிரதாயபூர்வமான விவசாயிகளின் ஊர்வலம் அநுராதபுரத்திலிருந்து நேற்று காலை 8.30 அளவில் ஆரம்பமானது.

நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் எடுத்துவரப்பட்ட புதிய விளை நெல் தொகையிலிருந்து விவசாய சேவை மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் முதல் விளைச்சலில் பாற்சோறு தயாரிக்கப்படுவது வழக்கம்.

புதிதாக விளைந்த நெல்லை வெளியிடும் வருடாந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பாரம்பரிய சம்பிரதாயங்களை பாதுகாத்துக் கொண்டு அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# துவிச்சக்கரவண்டி திருட்டு இளைஞர் ஒருவர் மடக்கிப்பிடிப்பு

பெண்ணொருவரின் துவிச்சக்கர வண்டியை திருடி சென்ற இளைஞர் ஒருவர் பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 2.45 மணியளவில் இருபாலைச் சந்தியில் இடம் பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த பெண்ணொருவர், கடைக்குச் செல்வதற்காக தனது சக பெண்ணொருவரின் துவிச்சக்கர வண்டியை கொண்டு சென்ற சமயம் அதனை யாரோ திருடிச்சென்று விட்டனர்.

பின்னர் அப்பெண் பஸ்ஸில் வடமராட்சிக்கு சென்று கொண்டிருந்த சமயம் இருபாலைச் சந்தியில் தேனீர் கடையொன்றில் குறித்த சைக்கிளை கண்டுள்ளார்.தொடர்ந்து பயணிக் காமல் பஸ்ஸை விட்டு இறங்கி கூக்குரலிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த திருடனுக்கு நிலைமை விளங்கியதை அடுத்து மதில் பாய்ந்து தப்பியோட முயற்சித்துள்ளான். இதன் போது அங்கிருந்த பொதுமக்கள் அவனை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதே வேளை யாழ். மற்றும் புறநகர் பகுதிகளில் தற்போது திருட்டுக்களும் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


# தமிழ் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அழகிய சல்வார், மற்றும் கொட்டன் சாரிகள் (Cotton Saree) என்பன

## சாவகச்சேரியில் மாபெரும் மலிவு விற்பனை

இடம்:- "கலா, காமென்ட்"
16A, கண்டிவீதி, சாவகச்சேரி.
(கொமர்ஷல் வங்கி அருகில்)

திகதி:- 03.04.2011 தொடக்கம் 08.04.2011 வரை
நேரம்:- காலை 9.00 மணி முதல்
இரவு 8.00 மணிவரை



(C/642)


# புத்தகப் பொதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் பயிலும் முப்பத்தொரு வறிய மாணவர்களுக்கான இலவசப் புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திரு. இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் இலவசப் புத்தகப் பொதிகளை தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் வழங்கவுள்ளது. (மி)

# கட்சிக்கு சவால்கள் அதிகம் எனினும் முன்நோக்கியே பயணிக்கும்

## ஐ.தே.க. செயலாளர் கூறுகிறார்




ஐக்கிய தேசிய கட்சி சவால்களை எதிர்கொண்டாலும் முன்நோக்கிச் செல்லக்கூடிய அரசியல் கட்சி என கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாத்தும்பர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் புத்தாண்டுக்கு பிறகு புதிய மத்திய செயற்குழுவொன்றையும், ஆலோசனைக் குழுவொன்றையும் ஸ்தாபிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# மரண அறிவித்தல்



## செபமாலை மரியசீலன்

15/2, தண்ணீர்த்தாங்கிவீதி, 5ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட செபமாலை மரியசீலன் (குமார்-பெயின்ரர்) 03.04.2011 நேற்று ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை - அருளம்மாவின் அன்பு மகனும், செல்வரத்தினம் துரையம்மாவின் மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், லட்சுமி (கொலண்ட்), சுசி, காலஞ்சென்ற கலம் மற்றும் சுமன், செல்லா, ஜென்சி, ஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தன் (கொலண்ட்), ராஜா, பாமினி, ஜெயந்தினி ஆகியோரின் மாமனாரும், சஞ்செய், ஜெய்சி, ரஷ்மினி, யெப்தா, கமலினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2011) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(113)

# பேருந்துக்கட்டணம் அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய வற்றின் விலைகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் உயர்த்தியுள்ளதை அடுத்து தனியார் பேருந்துகளின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயுக்களின் விலை தற்போது அதிகரித்துள்ளதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனியார் பேருந்துகளின் கட்டணம் அதிகரிப்பது தொடர்பாக 6ஆம் திகதி இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

# இலத்திரனியல் பொருட்கள் விலை அதிகரிக்கும் சாத்தியம்



ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி காரணமாக இலத்திரனியல் பொருட்களின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து உலகம் முழுவதும் ஸ்மார்ட் போன்கள் வீடியோ கேமராக்கள் போன்றவற்றின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடியோ கேம்ஸ் சாதனங்கள் வீடியோ கமராக்கள் மற்றும் ஸ்டில்கமராக்கள் தொலைக்காட்சி தயாரிப்பு என ஜப்பான் நிறுவனங்கள் தயாரித்து உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகின்றன. மேற்கண்ட நிறுவனங்கள் வரும் மே மாதத்தில் மீண்டும் செயற்பட தொடங்கும்.

முழு உற்பத்தியை அடைய ஆண்டு இறுதியாகி விடும் என்பதால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்து அதன் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுசன நூலகம்
[illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



மிகக் குறைந்த செல்வத்தைக் கொண்டு எவன் திருப்தி அடைகின்றானோ அவன்தான் முதன்மையான செல்வன். ஏனெனில் இயற்கையின் செல்வம் திருப்திதான்.

-சாக்ரடீஸ்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# பிஞ்சு உள்ளங்களுக்கு வாழ்வளியுங்கள்

சிறுவர்களைக் கடவுளின் குழந்தைகள் என்கிறார்கள். நாளை நாட்டைக்கட்டி எழுப்பும் எதிர்காலத்தலைவர்கள் என்கிறார்கள். ஆனால் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ எவராவது சிந்திக்கிறார்கள் என்றால் இல்லை என்றே பதில் வரும்.

பெற்றோர்களின் பாசத்திலும், அரவணைப்பிலும் தங்கியுள்ள சிறுவர்களைப் பற்றி இங்கு நாம் கவலை கொள்ள வேண்டிய தேவை இல்லை.

ஆனால் உதவிகளோ, அவரணைப்போ, பராமரிப்போ அற்ற சிறுவர்கள் படும் அவஸ்தைகள் பற்றியே நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் திணிக்கப்பட்ட கொடூர யுத்தம் பல ஆயிரக் கணக் கான சிறுவர்களை அநாதரவான நிலைக்குத் தள்ளியதுடன், அவர்களின் கனவுகளையும் சிதறடித்துவிட்டது.

பெற்றோர்களது அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் வளர்ந்து வந்த இச்சிறுவர்களைக் கொடூர யுத்தம் அவர்களிடம் இருந்து பிரித்தெடுத்து அநாதரவான நிலைக்குத் தள்ளிவிட்டது.

இத்தனைக்கும் அவர்கள் செய்த பாவம்தான் என்ன? ஏதும் அறியாத இப்பாலகர்களின் நிர்க்கதி நிலைக்கு எவர் மீதும் குற்றம் சுமத்துவதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை.

இவர்களின் இந்நிலைக்கான காரண காரியங்களைக் கண்டறிவது இப்பத்தியின் நோக்கமல்ல. எனினும், உண்மை நிலை கண்டறியப்பட்டு அதற்கான பரிகாரங்களைத் தேடி, அவர்களை சமூகப் பெறுமானம் மிக்கவர்களாக மாற்ற வேண்டும்.

யுத்தப் பாதிப்புகளுக்கு ஆளான இச்சிறுவர்கள் மத அமைப்புகளினாலும், பொது அமைப்புகளினாலும், கருணை உள்ளம் படைத்தவர்களினாலும் சிறுவர் இல்லங்களில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்கள் எல்லோரும் ஒரே தன்மையில் வைத்துப் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் வந்த வண்ணமுள்ளன.

வடமராட்சியிப் பகுதியில் கடவுளின் பெயரால் இயக்கப்பட்டு வந்த சிறுவர் இல்லம் ஒன்றின் மீது பருத்தித்துறை நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து அந்த இல்லத்தில் இருந்த சிறுவர்கள் வேறு இல்லத்துக்கு மாற்றப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவர்கள் இல்லங்களில் இடநெருக்கடி, சுகாதாரச்சீர்கேடு என்பன நிலவிவருவதை ஓரளவுக்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

யுத்தப் பாதிப்புக்குள்ளாகிப் பெற்றோரை இழந்தும், ஊனமுற்றும் காணப்படுகின்ற சிறுவர்களின் எதிர்காலம் குறித்து கருணை உள்ளம் படைத்த பரோபகாரிகள் சிந்திக்க வேண்டும்.

ஆலயங்களின் புனரமைப்பு வேலைகளுக்கும், கும்பாபிஷேகம் போன்ற சமயக் கிரியைகளுக்குப் பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு, கடவுளை மகிழ்விக்க முனைபவர்கள், அந்தக் கடவுளின் குழந்தைகளாக மதிக்கப்படும் சிறுவர்களின் வாழ்வில் ஒளியேற்றி அவர்கள் திருப்பதியடையக் கூடிய வகையில் சிறுதொகையை அவர்களின் நலனுக்கு ஒதுக்கிச் செயற்படுவார்களா?

வாழத்துடிக்கும் பிஞ்சு உள்ளங்களுக்கு வாழ்வளிக்க இவர்கள் முன்வருவார்களாக இருந்தால் அந்தக் கடவுளின் குழந்தைகள், அவர்களை வாழ்வளிக்க வந்த தெய்வங்களாக மதிப்பார்கள்.

-ஆசிரியர்-

# யுத்தம் நிறைவடைந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்வு

## ஐ.நா.சபை தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து 2 ஆண்டுகளான நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேறுவதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு முதல் 3 மாத காலப்பகுதியினுள் 597 அகதிகள் தூதுவராலய உதவியுடன் தமது முன்னைய இருப்பிடங்களுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பெரும்பாலும் திருகோணமலை மாவட்டத்திலேயே குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதைவிட மன்னார் மாவட்டத்தில் சுமார் 400 பேர் தன்னிச்சையாகவும் தமது பழைய இருப்பிடத்திற்குச் சென்றுள்ளதாக ஐ.நாடுகளுக்கான அகதிகள் தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாத மோதலின் பின்னர் இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த 3 ஆயிரத்து 200 இலங்கை அகதிகள் நாடு திரும்பவும் ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் அமைப்புத் துணைபுரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதுவராலயத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களுக்கு அமைய கடந்த 2010 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் 1 லட்சத்து 46 ஆயிரம் அகதிகள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 64 நாடுகளில் வாழ்ந்து வருவதாகவும், அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்கள் 32 ஆயிரம் பேர் தமிழ் நாட்டிலுள்ள 112 முகாம்களில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 32 ஆயிரம் பேர் முகாம்களுக்கு வெளியே வாழ்ந்து வருவதாகவும் இதைவிட ஏனையவர்களில் தமிழ் அகதிகள் பெருமபாலும் அவுஸ்ரேலியா, பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, கனடா, பிரான்ஸ், மலேஷியா போன்ற நாடுகளில் வாழ்ந்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தினப்போட்டி

(வடமராட்சி)

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கல்விக் கோட்டமட்டத்திலான அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் மருதங்கேணி கோட்டமட்டப் போட்டிகள் குடத்தனை அ.த.க. பாடசாலையிலும், கரவெட்டிக் கோட்டமட்டப் போட்டிகள் நெல்லியடி மத்தி மகா வித்தியாலயத்திலும் பருத்தித்துறை கோட்டமட்டப் போட்டிகள் வடஇந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (100)

## வருகை தரவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் தோற்றியவர்கள் இன்று திங்கட்கிழமை அல்லது நாளை மறுதினம் புதன்கிழமை குறித்த ஏதாவது நாளில் காலை 9.30 மணிக்குத் தென மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

வருகை தரும்போது உரியவர்கள் தேசிய அடையாள அட்டை, க.பொ.த (சா.த), (உ.த) மற்றும் பட்டப்படிப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப் பிரதியுடன் 2 நிழற் பிரதிகளையும் எடுத்துவருமாறும் அலுவலகத்தில் ஆங்கில உதவிப் பணிப்பாளர் வே.ஸ்ரீதரனுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (11)

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மூன்றாவது பங்குனித்திங்கள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய 3 ஆம் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை விசேட பூசை வழிபாடுகள், அபிஷேகம் என்பன இடம்பெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

யாழ்மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் கலந்துகொண்டு தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் பொங்கல் வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

கடந்த காலங்களைவிட இவ வருடம் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வழிபாடுகளில் கலந்துகொள்வதாகவும் இதற்கு இலகுவாக அரச மற்றும் தனியார் பேருந்து போககுவரத்து சேவைகளும் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கிணறுகளில் நுளம்பை அழிக்கும் மீன் வகைகள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால் அப்பகுதியிலுள்ள கிணறுகளில் நுளம்பை அழிக்கும் மீன் வகைகள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் நுளம்பு உற்பத்தி அதிகமாகக் காணப்படுவதை அடுத்தே சுகாதாரப் பிரிவினரால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## சுகாதாரமற்ற முறையில் குளிர்பானங்கள் தயாரிப்பு

(கொழும்பு)

யாழ்மாநகர சபைக்கு உட்பட்ட நகர்ப் பகுதிகளில் சுகாதாரமற்ற முறையில் குளிர்பானங்கள் தயாரித்து வண்டிகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் பல நோய்த் தொற்றுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேசிப்பழம், அன்னாசிப் பழம், தோடம்பழம் முதலியவற்றைப் பிழிந்த சாற்றுடன் நிறமூட்டிகள், சுவையூட்டிகள், ஐஸ் கட்டிகள் என்பன சேர்த்துக் குளிர்பானம் தயாரிக்கப்படுகிறது.

இவர்கள் பயன்படுத்தும் நீர் சுத்தமான இடத்திலிருந்து பெறப்பட்டதா, நிறமூட்டிகள், சுவையூட்டிகள் தரமானவையா என்பது சந்தேகத்துக்குரியதாகவுள்ளது.

அத்துடன் கையுறைகள் பயன்படுத்தாது வெறுங்கைகளால் பொருட்களைக் கையாளுகின்றனர்.

ஐஸ்கட்டிகளை றெஜிபோம் பெட்டிகளில் வைத்துப்பயன்படுத்துகின்றனர்.

தற்சுகாதார முறையில் தயாரிக்கப்படும் குளிர்பானங்கள் அருந்துவதால் நெருப்புக்காய்ச்சல், கொலரா போன்ற கொடிய நோய்க்கு ஆட்பட நேரிடும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் ஆவன செய்து மக்களைக் கொடிய நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கா)

# ஏ-9 வீதி அகலிப்புப் பணியில் தென்னிலங்கை “மெகா” நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் வீதி அகலிப்புப் பணியை சீன நிறுவனத்திடமிருந்து உப ஒப்பந்தமாக எடுத்துள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த மெகா நிறுவனத்தினர் வீதியின் அகலிப்புப் பணிக்கான எல்லை நிர்ணயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் தொழிலாளர்கள் வீதி அகலிப்புக்கான எல்லை அடையாளத்தை வீடுகள் கட்டடங்களின் உட்பகுதிக்குச் சென்று குறுக்குச் சுவர்களில் குறியீடு செய்து வருகின்றனர்.

பிரதான வீதியில் அரியாலை சந்தைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பகுதியில் பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தெரிவிக்கையில்-


வீதியின் மத்திய பகுதியில் இருந்து இரு பக்கத்திலும் 7 மீற்றர் தூரத்தை அடையாளப்படுத்தி வருகின்றோம். மூன்று வருடத் திட்டத்தின் கீழ் மெகா நிறுவனத்தினராகிய நாங்கள் முதலில் வீதி அகலிப்பை விரைவில் மேற்கொளளவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளுக்கான அளவீட்டுப் பணிகள் கல்வியங்காடு, நல்லூர், மாநகர சபை வீதிப் பகுதிகளில் சீனப் பொறியியலாளர்களின் தலைமையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்.கல்வித் திணைக்களத்தில் இருந்து கிழக்காக செம்மணி உப்பளப் பிள்ளையார் கோவில் வரையான செம்மணி வீதியின் இருபக்க அகலிப்பு வேலைகள் அதாவது இரு பக்கங்களை ஆழமாக்கி கலவையிடும் பணிகள் விரைவில் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (23)

# மாணவர்களின் ஆக்கங்களின் தொகுப்பு நூலுருவில் வெளியிடப்பட வேண்டும்

## யாழ்.பிரதிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு



(யாழ்.நிருபர்)

பாடசாலைக்காலத்தில் மாணவர்களின் ஆக்கங்களை நூலுருவில் வெளியிடுவதன் மூலம் அவர்களுடைய எழுத்தாற்றலையும் அறிவுத்திறனையும் வளர்க்க முடியும்.

இவ்வாறு யாழ்கனகரததினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்பட்ட 23 ஆவது "வணிகஜோதி" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது யாழ் கல்விவலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம் குறிப்பிட்டார்.

வணிகமன்றத் தலைவர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில்:

மாணவர்கள் வெறுமனே வகுப்பறைக் கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது தேடல் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். தமது தேடலை அடிப்படையாகக் கொண்டு ஆக்க முயற்சிகளில் ஈடுபடவேண்டும் அவர்களுடைய ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு நுலுருவில் வெளிவரும் போது மேலும் ஆக்கங்களை உருவாக்கும் ஆர்வம் ஏற்படுவதோடு அறிவாற்றலும் வளர்ச்சி பெறும்.

போர்க்காலச்சூழலில் பத்திரிகைத் தாள் மற்றும் அச்சு உபகரண வசதிகள் குறைவாயிருந்த காலங்களிலும் இந்தப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் வழிகாட்டலில் முன்னின்று பல நூல்களை வெளியிட்டு வந்துள்ளனர்.

ஒவ்வொரு மாணவர்களும் ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் கூட்டுச் செயற்பாடாக இயங்கியதன் மூலமே இன்று இந்த நூல் சிறப்பாக வெளிவந்துள்ளது.

பாடசாலைக்ளில் வெளிவரும் நூல்களின் முழுமையான உருவாக்கத்திற்கும் மாணவர்களின் பங்களிப்பு அவசியமாகும். இந் நூல் உருவாக்கத்தில் அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்று மாணவர்கள் திறம்பட வெளிக்கொணர்ந்தமை பாராட்டுக்குரியது என்றார். (10)



அண்மையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் 6 ஆவது சிங்கப்படைப் பிரிவினர் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து 'டெங்கு ஒழிப்பு' நிகழ்வாக பாடசாலை வளாகத்தில் சுத்தம் செய்வதைக் காணலாம். (19)

# நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் பயணிகள் கவனத்திற்கு எட்டாவது நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம்திகதி ஞாயிறுகிழமை காலை 9.45 மணிக்கு வவுனியா நகரசபை முன்றலில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வந்தடையும் பேருந்துக்குள் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்ட ஆலோசகர் க.செவ்வேள் பிரதம விருந்தினராகவும், அகில இலங்கை கலை இலக்கிய பேரவை தலைவர் கவிஞர் பொன்.சுகந்தன் விசேட அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 50 ஆண்டுகளாகத் திருத்தப்படாத சிறுப்பிட்டி கலையொளி வீதி

(சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி கலையொளிக் கிராம வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த கிராம வீதியானது 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருப்பதால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட இந்தக் கிராமம் நீண்டகாலமாக அபிவிருத்திப் பணிகளுக்கு புறக்கணிக்கபபட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன் இந்த வருடத்தின் முற்பகுதியில் வலிகாமம் கிழககுப் பிரதேச சபைக்கு பல மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டபோதும் இதுவரை இந்த வீதி அபிவிருத்தி தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவிததுள்ளனர். (02)

# நிர்வாகம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் நிர்வாகம் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பொதுக்கூட்டம் இன்றி செயற்பட்ட இந்த சனசமூக நிலையம் யாழ்.மாநகர மேயரின் தலையீட்டினால் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்தது.

மாநகர மேயரின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது புதிய நிர்வாகசபை தெரிவு செயயப பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வி)

# திருப்பாடுகளின் காட்சி

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'கடவுள் வடித்த கண்ணீர்" திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 12,13,14,15,16,17 ஆம் திகதிகளில் மன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நாடக ஆற்றுகைக் கான எழுத்துருவினை மன்ற இயக்குநர் அருட்திரு நீ.மரிய சேவியர், பிரதி இயக்குநர் ஜே.ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(52)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவ பல்கலைக கழகத்தின் உள்ளூர்மயமாக்கப்பட்ட செயல்களுக்கான சிறப்பு மையமும், இலங்கை ஆள்கள மையமும் இணைந்து வழங்கும் மாவட்ட பாடசாலைகளிடையிலான இணையத்தள வடிவமைப்புப் போட்டியில் (2010) வெற்றிபெற்றமைக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.புலோலி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (109)

# சேதமடைந்த நீர்க் குழாய்க்கு பதிலாக புதிய குழாய் பொருத்தப்பட்டது

(அரியாலை)

அரியாலை திருமகள் சனசமூக நிலைய ஒழுங்கைக்கு முன்னால் சேதமடைந்த நீர் வழங்கும் குழாய் அகற்றப்பட்டு தற்போது புது இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் உள்ள நீர்க் குழாய சேதமடைந்ததால அப்பகுதி மக்கள் நீண்ட தூரமான ஆனந்தன் வடலியடிப் பகுதியிலுள்ள கோவில் கிணற்றிலிருந்தே குடிநீரைப் பெற்று வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குறித்த பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவந்த நிலையில் இது தொடர்பாக யாழ்.மாநகர சபைக்கு அறிவித்ததாகத் தெரிவிக்கின்றனர்.

இதனை அடுத்தே யாழ.மாநகர சபை நீர்வழங்கல் பகுதி ஊழியர்களினால் சேதமடைந்த குழாய் அகற்றப்பட்டு புது இணைப்பு வழங்கப்பட்டதாகவும் இதனால் குடிநீரை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தொிவிக்கின்றனர். (23)

# வைத்தியசாலையின் கட்டடப்பணிகளுக்கு கனரக இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டன

(அரியாலை)

யாழ்.போதனாவைத்தியசாலையில மேற்கொள்ளப்படும் நவீன கட்டுமானப்பணிகளுக்காக கொழும்பிலிருந்து கனரக இயந்திரங்கள், கருவிகள், மிகப்பெரிய பாரம் தூக்கி இயந்திரம் என்பன எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் தெற்குபபுற வீதியில் அமைந்துள்ள மதில்கள் இடிக்கப்பட்டே இவ் இயந்திரங்கள் உள்ளே கொண்டு செல்லபபட்டதாகவும், இந்த இடைவெளிக்கு பெரிய "கேற்றுகள்" போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிககப்படுகின்றது.

இவ்வாறான பாரிய இயந்திரங்களினால் கட்டடப் பொருடகளை எடுத்துச் செல்வது மிகவும் இலகுவாக இருப்பதாகவும் கட்டுமானப்பணிகளை விரைவாக மேற கொள்ளக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(23)

# 63 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

(விசுவமடு)

வடக்கு மாகாணத்தினால் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி அன்று மு/விசுவமடு மகாவித்தியாலயம், பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் கிருஷ்ணகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக்கண்ணாடிகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் விசுவமடு மகா வித்தியாலயத்தில் கல்விபயிலும் 63 மாணவர்களுக்கு இலவசமாக கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் 2 மாணவர்களுக்கு கேட்டல் கருவியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (17)

## ஆனையிறவு குடாக்கடலில் மீன்பிடிக்க அனுமதி

(வடமராட்சி)

ஆனையிறவு குடாக்கடலில் 30 வருடங்களின் பின்னர் மீண்டும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சி பிரதேசக்கடற்றொழிலாளர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியின் பயனாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் இக்கடலில் மீனவர்கள் மீன், இறால் என்பவற்றை பிடித்து வருவதாகவும் கடந்த யுத்த காலங்களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியாக இருந்த இக்கடற்பகுதி முன்பு மீன்பிடிப்பதற்குத் தடைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)



கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் பெற்றோர், மாணவர்கள் இணைந்து சிரமதானம் மேற்கொள்வதைக் காணலாம்.

படம்: கார்த்திகேயன்

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்.



# பிரச்சினைகளையும் மற்றும் தேவைகளையும் அதிகாரிகள் தயக்கமின்றி வெளிப்படுத்தி உரிய தீர்வைப்பெற வேண்டும்

## ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்களின் நலன் சார்ந்து மேற்கொள்ளபபடுகின்ற தீர்மானங்களை அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள், மக்கள் அமைப்பினர் என அனைவரும் ஒன்றுபட்டு அக்கறையோடு நிறைவேற்றி பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழையுங்கள் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் மக்களினதும் பிரதேசத்தின் பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை இவ்வாறு அனைத்துத்துறை அதிகாரிகளும் சமூக மளித்திருக்கும் கூட்டங்களில் தயக்கமின்றி வெளிப்படுத்தி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டினையும் பிரதேசத்தின் அபிவிருத்தியினையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் சந்திரகுமார் கேட்டுக் கொண்டார்.

தற்போது வடக்கின் அபிவிருத்திக்கு அரசு பெருமளவு நிதியினை ஒதுக்கி, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. எனவே, அதனை நடைமுறைப்படுத்துகின்ற அரச அதிகாரிகள் அக்கறையோடு செயற்பட்டு விரைவான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

வழமைபோன்று ஒவ்வொரு துறைசார் விடயங்களிலும் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, அது தொடர்பில் மக்கள் அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, அதில் குறைகள் காணப்படுகின்ற பட்சத்தில் சமூக மளித்திருக்கும் உரிய அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வுகளும் பெறப்பட்டன.

அந்த வகையில் சண்டிலிப்பாயில் சந்தை ஒன்றினை அமைப்பதற்கும், காக்கைதீவுச் சந்தைக் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணை யாளருக்கு பணிக்கப்பட்டதோடு, மாதகல் பிரதேசத்தல் பிரதேச சபையின் உப அலுவலகம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் நெல்சிப் திட்டத்தின் கீழ் பிரதேசத்தின் பொதுக் கட்டடங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றைப் புனரமைக்கும் மற்றும் புதிதாக அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைவிட மாதகல் பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திற்கும் குறிப்பாக மீள்குடியேறிய பிரதேசங்களுக்கும் பிரதேச சபை மூலம் இலவசமான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கும் பணிக்கப்பட்டது.

அத்துடன், சுதுமலை காக்கைதீவு, சாவற்கட்டுக் கால்வாய்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்து புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரப்பட்டதோடு, வீதிகள் புனரமைப்புத் தொடர்பில் பிரதேச சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றை விரைவுபடுத்தியும், மோசமான வீதிகள் என்ற வகையில் முன்னுரிமைப்படுத்தியும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறும் ஏற்கனவே வீதி விளக்குகள் காணப்பட்ட இடங்களில் மீளவும் அவற்றைப் பொருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மின்சாரம் கிடைக்கப்பெற்ற இடங்கள் என மக்கள் தெரிவித்த பிரதேசங்களுக்கு மின்சார சபை உத்தியோகத்தர்களை நேரில் சென்று பார்வையிட்டுத் தேவை மதிப்பீட்டினை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணிக்கப்பட்டது.

இவ்வாறு மக்களின் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் துறைசார் அதிகாரிகளோடு பேசி மக்களுக்குத் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இக்கூட்டத்திற்குப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி, பிரதேச சபைச் செயலர் திருமதி புஸ்பமலர், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நிரஞ்சனா மற்றும் திணைக்களங்கள் தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகள், ஈ.பி.டி.பி யின் வலிகாம பிரதேச இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவா, மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





விசுவமடு மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினர்களுக்கு மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்பதைக் காணலாம்.

## பரீட்சை விண்ணப்ப திகதி நாளையுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் நடத்தப்படவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

பாடசாலைகளிலிருந்து தோறத் தகுதிபெற்ற மாணவாகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி நாளை 5 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

## 35 கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(வடமராட்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நெக்டெப் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 உதவி அரச அதிபர் பிரிவுகளின் கீழுள்ள 35 கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கலந் துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் மற்றும் நெக்டெப் திட்டப் பணிப்பாளர் கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் பூநகரி, பச்சிலைப் பள்ளி, கண்டாவளை, கரைச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள கரையோரக் கிராமங்களே தெரிவு செய்யப்பட்டு இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(100)



மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அமெரிக்காவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கறலினும் அவரது பாரியாரும், வைத்தியசாலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

## பணம் உழைக்கும் போட்டியால் குறுந்தூரப் பயணிகள் சிரமம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - கொடிகாமம் வீதி வழியாக கொழும்பு, வவுனியா செல்லும் அரச, தனியார் பேருந்துகளுக்கிடையே ஏற்படும் போட்டி காரணமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லாததன் காரணமாக பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மாலை வேளைகளில் வீடு செல்லும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் தாம் செல்லும் பயண இடத்துக்குச் செல்வதில் பெரும் சிரமத்தையும், காலநேர விரயத்தையும் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.-

இதேவேளை, குறித்த பேருந்துகள் வரணி, கொடிகாமம் போன்ற இடங்களுக்கு, குறிப்பாக குறுகிய தூரம் செல்ல வேண்டிய பயணிகளையும் ஏற்றிச் செல்வதில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, அரச, தனியார் பேருந்துகள் தமக்கிடையிலான போட்டிகளை விடுத்து, பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டும் என்ற மனப்பான்மையுடன் சேவையாற்ற வேண்டுமெனப் பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(17)

## ஆதினியின் இன்றைய பலன்

(04.04.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 21

இராகுகாலம் 7.40–9.10, சுபநேரம் 12.10 –01.40

பிரதமை மு.இ.10.33, ரேவதி மாலை 5.24,

சித்தம், மூன்றாம் பங்குனித் திங்கள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– அதிகலாபம், பெரியோர் பாராட்டு, சன்மானம் பெறல்.

ரிஷபம்:– முயற்சிகள் பலிதம், ஆரோக்கிய மிகுதி, குதூகலம்.

மிதுனம் :– தொழிலில் உயர்வு, அதிக லாபம், சமூகத்தால் மதிப்பு.

கடகம்:– நோய் நீக்கம், அதிக லாபம், தெய்வ நினைப்பு.

சிம்மம்:– விருந்துணவு, நண்பர் பாராட்டு, வெகுமதி கிடைத்தல்.

கன்னி :– அவதானக் குறைவு, பொருள் இழப்பு, அரச பயம்.

துலாம் :– காரிய சித்தி, நண்பர் உதவி, பெரியோர் பாராட்டு.

விருச்சிகம்– தொழிலால் நட்டம், மனக் குழப்பம், பொருள் இழப்பு.

தனுசு:– எதிலும் வெற்றி, பொருள் வரவு, குடும்பத்தில் சுபநிகழ்வு.

மகரம்:– பாராட்டப்படல், மதிப்பு உயரல், பொருள் வரவு.

கும்பம் :– மனத்தைரியம், துணிவான செயல், அதிக லாபம்.

மீனம்:– சோம்பல் மிகுதி, காரியக்கேடு, குடும்பச் சுமை.

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட பல்கலை மாணவர் உயர்கல்வியைத் தொடர நிதியுதவி அளிப்பு



(கொழும்பு)

வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு அவர்களின் உயர் கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக, நிதியுதவிகள் அளிப்பதற்கான நடவடிக்கைகளை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மேற்கொண்டுள்ளார்.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் நிதிக் கொடுப்பனவு உட்பட மற்றுமொரு கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் இவ்வாறு வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவுகள் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை.

அத்துடன் வங்கிகளில் மாணவர்கள் தமக்குத் தேவையான வகையில் இலகு கடன்களைப் பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இந்தச் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மனித முதலீட்டு அபிவிருத்தி நிதி எனும் புதிய முன்மொழிவை அமைச்சரவைக்கு முன்வைத்தவேளை, அதனை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளதுடன் இதற்குத் தேவையான சட்டவரைவைத் தயாரிக்கவும் பணித்துள்ளது.

இந்த முன்மொழிவின்படி, வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்கள், தமது கல்வித் தேவைக்காக வங்கிகளிலிருந்து கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கடனை அவர்கள் தமது பட்டப்படிப்பை முடித்த பின்னர் வேலைக்குச் சேரும் போது மாதாந்த சம்பளத்திலிருந்து செலுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.தே.கட்சியின் பதவி நிலைகளுக்கு தேர்தல்கள் மூலம் தெரிவு இல்லை

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)



எதிர்வரும் காலங்களில் தேர்தல்கள் மூலம் கட்சிக்கு எவரும் தெரிவு செய்யப்படமாட்டார்களெனவும் மாறாக, பல்வேறு தரப்பினரதும் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து நியமிக்கப்படுவார்களெனவும் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகோத்தாவில் கட்சியின் சார்பாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களின் சத்தியப் பிரமாண நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் செயற்பாட்டுக்குழு மேற்படி தீர்மானத்திற்கு ஆதரவு அளித்துள்ளது. எதிர்வரும் காலத்தில் எந்தவொரு நபரும் தனியொரு பிரிவை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. கட்சியை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு அனைவரும் உறுதி பூண்டுள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கிராம ரீதியாக கட்சியின் செல்வாக்கை மேம்படுத்துவதற்கு சகலரும் செயற்பட வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# தப்பியோடியோரில் 6426 பேர் கைது

(கொழும்பு)


இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஆறாயிரத்து 426 படையினரைக் கைது செய்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல்ல தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து இதுவரை 40 ஆயிரம் படையினர் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் ஆறாயிரத்து 406 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரை 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இராணுவ சட்ட நடவடிக்கைக்குப் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்படுவரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிள்ளைகளிடம் தங்கியிருப்பதைத் தவிர்க்கவே ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது!

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு



(கொழும்பு)

**வயது முதிர்ந்த காலத்தில், பிள்ளைகளிடம் பெற்றோர் தங்கி நிற்பதைத் தவிர்க்கும் வகையிலேயே தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் ஊழியர்கள், தற்போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவைச் செலுத்தி வருகின்றனர். அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய ஓய்வூதியத்திட்டத்தின் படி ஊழியர் சேமலாப நிதிக்கு எவ்வித பாதிப்பும் வரமாட்டாது. அதற்கு மேலதிகமாகவே இந்த ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்போது பணியாளர் தனது சம்பளத்திலிருந்து எட்டு வீதத்தையும், பணிகொடுப்பவர் 12 சதவீதத்தையும் ஊழியர் சேமலாப நிதிக்காக செலுத்துகின்றனர். தற்போது அறிமுகப்படுத்தப்படவுள்ள ஓய்வூதியத் திட்டத்திற்கு இருசாராரும் தமது கொடுப்பனவிலிருந்து இரண்டு வீதத்தை வழங்க வேண்டும். அதாவது பணியாளர் ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்கும் எட்டு வீதத்தில் இரண்டையும், பணி கொடுப்பவர் 12 வீதத்தில் இருந்து இரண்டையும் ஓய்வூதியக் கொடுபனவுக்காக வழங்க வேண்டும். மிகுதியாக உள்ள ஆறு மற்றும் பத்து வீதங்கள் ஊழியர் சேமலாப நிதிக்குச் செல்லும்.

ஓய்வுதியத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும் ஒருவர் நிறுவனமொன்றில் பத்து வருடங்கள் பணியாற்றி இருக்கவேண்டும். அரசாங்கம் ஈ.ரி.எவ். ஈ.பி.எவ். திட்டத்தை ஒருபோதும் நிறுத்தமாட்டாது. இதற்கும் மேலதிமாகவே ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். பணத்தை தமது சேவைக்காலம் முடித்துப் பெற்றுக் கொள்பவர்கள் அதனை பல்வேறு வகையிலும் செலவழித்து விடுகின்றனர். அத்துடன் வயது முதிர்ந்த காலத்திலும் பிள்ளைகள் இவர்களைக் கவனிப்பதில்லை. எனவே, இவர்களுக்கு மாதாந்தம் நிதியுதவி அளிக்கும் வகையிலேயே இந்த ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக ஈ.பி.எவ். விற்கு பணம் செலுத்துபவர்களாக 20 இலட்சம் பேரும், 15 இலட்சம் பேர் தொடர்ச்சியாகப் பணம் செலுத்தாதவர்களாகவும் உள்ளனரென அவர் மேலும் தெரிவித்தார்.



**மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியைப் பார்வையிடச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.**

# பீரிஸை சந்திக்க மறுத்த வில்லியம்

பிரித்தானியாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசை, அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கி சந்திக்க மறுத்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடந்த வாரம் .ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பிக்க முன்னர், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தார்.

சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கப்படாத நிலையிலும், அவரைச் சந்திக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் வெளிவிவகார அமைச்சர் லண்டன் சென்றிருந்தார். ஆயினும், அவரை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கி சந்தித்துப் பேசவில்லை.

இதன்காரணமாக, பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சர், லியம் பொக்ஸ், வர்த்தக முதலீட்டு அமைச்சர் லோர்ட் கிறீன், வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் ஆகியோரையே அவர் சந்தித்துப் பேசியுள்ளார். அதுடன் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அவர் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரித்தானிய வெளிவகார அமைச்சருடனான சந்திப்பு சாத்தியமாகாத நிலையில், தமது அதிகாரபூர்வ பயணத்தை இடையிலேயே முடித்துக் கொண்டு, தொடர்ந்தும் அங்கு தனிப்பட்ட ரீதியாகத் தங்கவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளார்.

இலங்கை அமைச்சர் பீரிசின் மகளும், பேரக் குழந்தையும் லண்டனில் இருப்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார். லண்டனில் இருந்து அடுத்த வாரமே கொழும்பு திரும்பவுள்ள அவர், தனிப்பட்ட ரீதியாக அங்கு தங்கவுள்ளதாகக் கூறியுள்ள போதும் , அதிகாரபூர்வமான பல நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். குறிப்பாக பிரித்தானியாவில் உள்ள இலங்கையைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்களின் சங்கத்தில் இலங்கை அமைச்சர் பீரிஸ் உரையாற்றவுள்ளார்.

# நீர், சுகாதார இலக்கை அடைவதில் முன்னிலை வகிக்கின்றது இலங்கை

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பெருமிதம்

(கொழும்பு)

ஆயிரமாம் ஆண்டின் நீர் சுகாதார இலக்கை அடையும் தெற்காசிய வலய நாடுகளில் இலங்கை முன்னிலை வகிப்பதாக நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீர் சுகாதாரம் பற்றிய நான்காவது தெற்காசிய மாநாடு கொழும்பில் நாளை தொடக்கம் 6 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இது தொடர்பாக தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை அரசின் சார்பில் நீர், சுகாதாரம் பற்றிய நான்காவது தெற்காசிய மாநாட்டை நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சு நடத்துகின்றது. பத்தாயிரமாம் ஆண்டின் நீர், சுகாதாரம் தொடர்பான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள சவால்களை வெல்லுவதை நோக்காகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படு கின்றது.

சபை, யாழ்ப்பாணம்.

# வீரர்களின் கூட்டு முயற்சியே கிண்ணத்தை வெல்லக்காரணம்



(மும்பை)

வீரர்களின் கூட்டு முயற்சியால் உலகக் கிண்ணத்தை வென்றோம். கிண்ணத்தை வெல்ல ஒவ்வொரு வீரரும் முக்கிய பங்கு வகித்தனர் என இந்திய அணியின் தலைவர் டோனி தெரிவித்தார்.

பத்தாவது உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வெற்றியை எப்படிக் கொண்டாடுவது என்றே எனக்குத் தெரியவில்லை. வெற்றிக்கான ஓட்டத்தை நான் சிக்சர் மூலம் அடித்தபோது அதிகமாக உணர்ச்சிவசப்பட்டேன். கிரிசை விட்டுப் பாதித் தூரம் வந்து இந்த ஷாட்டை அடித்தேன். ஸ்டம்பை பிடுங்கி எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினேன்.

என்னுடன் இருந்த யுவராஜ்சிங்கும் அதிக உணர்ச்சி வசப்பட்டடார். நாட்டு மக்களின் பேராதரவால் இந்த வெற்றி கிடைத்தது. மும்பை வான்கடே ரசிகர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். தொடக்கத்தில் சேவாக், டெண்டுல்கர் ஆட்டம் இழந்த போது ஒவ்வொரு ஓட்டங்களுக்கும் கைதட்டி வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

இறுதிப்போட்டியில் சிறிசாந்துக்கு பதிலாக அஸ்வினைச் சேர்த்து இருக்கலாமே, நான் முன்னதாக களம் இறங்கியது ஏன் என்று பல கேள்விகள் கேட்கலாம். எனது முடிவு எதுவாக இருந்தாலும் இறுதியில் வெற்றி பெற்றதால் அதைப்பற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நான் ஒரு அதிர்ஷ்டக்காரன். கிரிக்கெட்டின் அனைத்து நிலையிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர் போட்டி) எனது தலைமையிலான அணி சிறப்பாக விளையாடி வருகிறது என்றார்.

# இணைப்பாட்டம் பிரிக்கப்படாமையே தோல்வியைத் தழுவக் காரணமாகும்

(கொழும்பு)

300 ஓட்டங்கள் எடுத்திருந்தாலும் போதுமானதாக இருந்திருக்காது என்று நினைக்கிறேன். தொடர்ந்து விக்கெட் கைப்பற்றியும் இந்தியாவுக்கு அதிக நெருக்கடி கொடுக்க முடியாமல் போனதே தோல்விக்கான காரணமென இலங்கை அணித் தலைவர் சங்கக்கார தெரிவித்தார்.

இலங்கை அணி நேற்று நாடு திரும்பியது. இந்நிலையில் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் இலங்கை அணியின் தலைவர் குமார் சங்ககார ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களை விடச் சிறந்த அணிதான் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது. கம்பீர் மிகவும் சிறப்பாக விளையாடினார். இதேபோல தலைவர் டோனியும் பொறுப்புடன் விளையாடி எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் செய்து விட்டார். அவரது ஆட்டம் புத்திசாலித்தனமாக இருந்தது.

இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை சிறப்பாக உள்ளது. எங்கள் அணி மிகச் சிறப்பாக விளையாடி 274 என்ற ஓட்ட



இலக்கை இந்தியாவுக்கு நிர்ணயித்தது.

இந்த ஓட்ட இலக்கு இறுதிப் போட்டியில் ஒரு அணி பெறக்கூடிய அதிகபட்ச இலக்குத்தான். நாங்கள் அப்போது எங்களுக்குத் தான் உலகக் கிண்ணம் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம்.

ஆனால் இந்திய வீரர்களின் இணைப்பாட்டத்தை பிரிக்க எங்களால் முடியவில்லை. ஆனால் எங்கள் வீரர்கள் மிகச்சிறப்பாக விளையாடினார்கள் என்றார்.

# தவறான முடிவு



(கராச்சி)

உலகக் கிண்ணத் தொடரின் பாதியில், ஓய்வை அறிவித்த அக்தரின் முடிவு தவறானது என, பாகிஸ்தான் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: ஓய்வு என்பது தனிப்பட்ட வீரரின் முடிவு. இதில் தலையிட விரும்பவில்லை. ஆனால் ஓய்வை சரியான நேரத்தில் அறிவிக்க வேண்டும். தொடரின் பாதியில், அக்தர் ஓய்வை அறிவித்தது தவறானது. இவர், உலகக் கிண்ணத் தொடருக்கு முன்போ அல்லது பின்னோ அறிவித்திருக்கலாம் என்றார்.

# சிதறுகிறது தென்னாபிரிக்க அணி



(கேப்டவுன்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தோல்வியால் தென்னாபிரிக்க அணியில் சிரேஷ்ட மற்றும் இளம் வீரர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கிளைவ் ரைஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க இந்தியா கிளம்பும் போதே, அணியில் பிளவு இருப்பதாக செய்திகள் வெளியாகின. அணி புறப்படும் போது தரப்படும் "பார்ட்டியின்" போது இது அப்பட்டமாகத் தெரிந்தது. சிரேஷ்ட வீரர்கள், இளம் வீரர்களிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லை. இது தெனனாபிரிக்க அணியின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

தற்போது அணியிலுள்ள முக்கிய சிக்கல், நெருக்கடியை எப்படி சமாளிப்பது என்பது தான். இந்நிலையில் ஸ்மித் பதவி விலகியிருப்பது மிகவும் நல்லது தான். அணித் தேர்விலும் பாகுபாடு உள்ளது. ஒருசில வீரர்கள் திறமை அடிப்படையில் இல்லாமல், வேறு காரணங்களுக்காகத் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும்.

கடந்த எட்டு ஆண்டுகளாக அணியின் தலைவராக இருந்த ஸ்மித், அனைத்து வித போட்டிகளுக்கான அணித் தலைவர் பதவியில் இருந்தும் விலகவேண்டும். ஏனெனில் இதுவரை இவர் பெரிதாக ஒன்றும் சாதித்துவிடவில்லை. அணியில் இடம் பெற்றாலும் ஐந்தாவது இடத்தில் தான் களமிறங்க வேண்டும் என்றார்.

# அணிக்கு குவிகிறது வாழ்த்து, பரிசு மழை

(புதுடில்லி)


உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினருக்கு வாழ்த்து மற்றும் பரிசு மழை குவிந்து வருகிறது. இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல், பிரதமர் மன்மோகன்சிங் உட்பட பலர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

கிண்ணத்தை வென்ற இந்திய அணி வீரர்கள் அனைவருக்கும் இந்திய கிரிக்கெட் சபை சார்பில் தலா ஒரு கோடி (இந்திய நாணயப்படி) பரிசாக வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஹசாங் மனோகர் அறிவித்துள்ளார்.

அணிப் பயிற்சியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு தலா ரூ.50 லட்சமும், அணி தேர்வாளர்களுக்கு தலா ரூ.25 லட்சமும் பரிசாக அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வேண்டும் 3ஆவது இடம்



அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்கை தொடர்ந்து மூன்றாவது இடத்தில் களமிறங்க அனுமதிக்க வேண்டும் என, தென்னாரிக்க அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

பங்களாதேஷ் தொடரை அடுத்து தென்னாபிரிக்க மற்றும் இலங்கை அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலிய அணி பங்கேற்கிறது. இதற்கான அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கேல் கிளார்க்குக்கு, பொண்டிங் மற்றும் மைக்கேல் ஹசி முக்கிய உதவியாக இருப்பார்கள். பொண்டிங்கைப் பொறுத்தவரையில் மூன்றாவது இடத்தில் தான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிராக இவரது ஆட்டத்தைப் பார்க்கும் போது, அவரை தொடர்ந்து அதே இடத்தில் விளையாட அனுமதிக்க வேண்டும் என்றார்.

# பெருமையான நேரம்

எனது வாழ்க்கையில் இது மிகவும் பெருமையான நேரம் ஆகும். வெற்றி மகிழ்ச்சியில் என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை என நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

பத்தாவது உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: பத்தாவது உலகக் கிண்ணத்தை உள்ளூர் மைதானத்தில் வென்றது மிகப்பெரிய சிறப்பாகும். எனது அணியை நினைத்து நான் பெருமை அடைகிறேன். கடந்த 2 1/2 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக சிறப்பாக ஆடியதற்குக் கிடைத்த வெற்றி இது என்றார்.






சென்சி றேமன் அவர்களின் அழைப்பை ஏற்று முதன்மை கராத்தே ஆசிரியர் சிகான் ராமச்சந்திரன் வடமாகாண கராத்தே வீரர்களுக்கு கிறீன் பீல்ட் மண்டபத்தில் பயிற்சி வழங்கினார். இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டவர்களைக் காணலாம். (படப்பிடிப்பு : மிதுலன்)

# ஐவரிகோஸ்ட் நாட்டில் கலவரம் 800 இற்கும் மேற்பட்டவர்கள் பலி

(டியூகோவ்)

ஆபிரிக்காவில் உள்ள ஐவரிகோஸ்ட் நாட்டில் கடந்த ஆண்டு அதிபர் தேர்தல் நடந்தது. அதில் அலாஸ்சான் குவாட்டாரா வெற்றி பெற்று புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், அவரது தேர்தல் செல்லாது எனக் கூறி குவாக்போ அதிபர் பதவி விலக மறுத்து விட்டார். ஆனால் ஐ.நா.சபை குவாட்டராவை அதிபராக அங்கீகரித்து உள்ளது.

இந்த நிலையில் குவாட்டரா மற்றும் குவாக்போவின் ஆதரவாளர்கள் இடையே ஆங்காங்கே மோதல் வெடித்தது. இந்த மோதல் கலவரமாக மாறியுள்ளது. டியூகோவ், அபித்ஜான் உள்ளிட்ட நகரங்களில் தொடர்ந்து கலவரம் நடந்து வருகிறது.

இரு தரப்பினரும் அவர்களின் ஆதரவு ராணுவ வீரர்களும் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் தாக்கி வருகின்றனர். அதில், இதுவரை சுமார் 800 பேர் பலியாகியுள்ளனர்.

வீதியெங்கும் பிணக் குவியல்களாகக் கிடக்கின்றன. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

எனவே மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் உள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். இதற்கிடையே தேர்தலில் தோல்வி அடைந்த குவாக்போ உடனடியாக பதவி விலக ஆபிரிக்க யூனியன் வலியுறுத்தியுள்ளது. இருந்தும் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர் பதவி விலக வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக கூறியுள்ளனர். கலவரம் காரணமாக அங்கு கொள்ளைச் சம்பவங்களும் பெருமளவில் நடைபெறுகிறது. இவர்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மிரட்டிப் பணம் பறித்து வருகின்றனர்.



# அணு உலையில் ஏற்பட்ட கீறலால் கடலில் கலந்துள்ள கதிர்வீச்சு



(டோக்கியோ)

ஜப்பானின் அணுஉலை கதிர் வீச்சு கடலில் கலந்தது. ஜப்பானில் கடந்த மாதம் 11 ஆம் திகதி பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டது. இதில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இப்பேரழிவில் புகுஷிமாவில் உள்ள அணுமின் நிலைய அணுஉலைகள் வெடித்துச் சிதறின. அதில் இருந்து வெளியே றிய கதிர்வீச்சு பால், குடிநீர், உணவுப் பொருட்களில் பரவியுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் பொது மக்கள் அவதிப்படுகின்றனர். காற்றிலும் கதிர்வீச்சு பரவியுள்ளது. அது பக்கத்து நாடுகளான தென்கொரியா, சீனா, தைவான், இந்தோனேஷியா மற்றும் இங்கிலாந்து சுவிட்சர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவி வருகிறது.

இந்த நிலையில் தற்போது அணுக் கதிர்வீச்சு கடலிலும் கலந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டோக்கியோ அணுமின் கார்ப்பரேசன் அதிகாரிகள் புகுஷிமாவில் வெடித்துச் சிதறிய அணு உலைகளில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, வெடித்த 2ஆவது அணு உலையின் அடியில் கீறல் ஏற்பட்டுள்ளது.

அதில் இருந்து கசிந்த கதிர்வீச்சு கடலில் கலந்துள்ளது. இதனால் புகுஷிமா அணுஉலையை ஒட்டியுள்ள கடல் தண்ணீரில் வழக்கத்தை விட 1000 மடங்கு அதிகமாக கதிர்வீச்சு உள்ளது. ஆகவே அதைத் தடுக்கும் நடவடிக்கையில் அணு மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

டோக்கியோ அணுமின் நிலைய கார்ப்பரேசன் தற்போது கீறல் ஏற்பட்ட 2 ஆவது அணு உலையை கான்கிரீட் மூலம் மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையே, பூகம்பம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டு வெடித்து சிதறிய புகுஷிமா அணு உலையை ஜப்பான் பிரதமர் நேட்டோ கான் நேற்று முதன் முறையாக நேரில் பார்த்தார்.

கதிர்வீச்சுத் தாக்கத்தை தடுத்து நிறுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். மேலும், ரிகுஷெண்ட கடா என்ற மீன்பிடிக் கிராமத்தில் உள்ள அகதிகள் முகாமுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். நிவாரணப் பணிகள் நடைபெறுவது குறித்து அவர்கள் மத்தியில் பேசினார்.

# ஆப்கானில் குர்ஆன் நூல் எரிப்பு ஜனாதிபதி ஒபாமா கண்டனம்

அமெரிக்காவில் கடந்த மாதம் குர்ஆன் நூல் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் வெள்ளிக்கிழமையன்று வன்முறை வெடித்தது.

ஐ.நா மையம் உள்ள மஸார் எ ஷரீப் பகுதியில் நடந்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். இதில் 7 பேர் ஐ.நா ஊழியர்கள். மத போதகர் ஒருவர் குர்ஆன் நூலை எரித் தார். புனித நூலை எரிப்பது என்பது சகிப்புத் தன்மை இல்லாத நடவடிக்கை. அதே நேரத்தில் அப்பாவி மக்களைக் கொல்வது அதற்குத் தீர்வாக இருக்காது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்தார். சனிக்கிழமையன்று நடந்த இரண்டாம் நாள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஆப்கானிஸ்தானின் தெற்கு நகரமான கந்தகாரில் 10 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று ப்ளோ ரிடாவில் உள்ள டோவ் வேர்ல்டு சமூக மையத்தில் மத போதகர் வெய்ன்சாப் புனித நூல் குர்ஆனை எரித்தார.



அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று உலக வர்த்தக மையக்கட்டடம் இஸ்லாமிய தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. இந்தத் தாக்கு தல் நினைவு நாள் கடந்த ஆண்டு கடைப்பிடிக்கப்பட்ட போது மத போதகர் டெரிஜோன்ஸ் குர் ஆன் நூலை எரிக்க முயன்று விமர்சனத்திற்கு உள்ளானார். அவரது முன்னிலையில் தற்போது மத போதகர் வெய்ன் சாப் குர் ஆனை எரித்தார்.

# வெளிநாட்டு விவகாரங்களிலேயே ஜனாதிபதி ஒபாமா அதிக கவனம்

## அமெரிக்க மக்கள் தெரிவிப்பு

உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்ப்பதைவிட வெளிநாட்டு விவகாரங்க ளிலேயே அதிபர் ஒபாமா அதிக கவனம் செலுத்துகிறார் என்று அமெரிக்க மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஒபாமாவின் ஆட்சி முறை குறித்து அமெரிக்காவில் தேசிய அளவில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் இத்தகவல் தெரியவந்துள்ளது. மார்ச் 25 முதல் 27 ஆம் திகதி வரை இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

முக்கியமாக இப்போது லிபியா விவகாரத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமா அதிகம் தலையிடுவதைச் சுட்டிக்காட்டி அமெரிக்க மக்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஒபாமாவின் நிர்வாகம் குறித்துக் கருத்துத் தெரிவித்தவர்களில் 46 சதவீதம் பேர் அவர் வெளிநாட்டு விவகாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார் என்று கருத்துக் கூறியுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக உள்நாட்டு சுகாதார கொள்கையில் அவர் அதிக கவனம் செலுத்துவதாக 40 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

முதலில் வெளிநாட்டு விவகாரம், லிபியா பிரச்னை, அடுத்ததாக உள்நாட்டு சுகாதாரம், பொருளாதாரம், பட் ஜெட் ஆகியவற்றுக்கு ஒபாமா முக்கியத்துவம் அளிக்கிறார் என்பது பெரும்பாலான மக்களின் கருத்தாக உள்ளது.

இதற்கு முன் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு அமெரிக்காவின் பொருளாதாரத்தை முன்னேற்ற ஒபாமா நடவடிக்கை எடுப்பதாக 40 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இப்போது இது 39 சத வீதமாகக் குறைந்து விட்டது.

முன்னதாக சர்வதேச அளவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராக ஒபாமா தேர்வு செய்யப்பட்டார்.

அப்போது அமெரிக்காவில் வேலைவாய்ப்பை அதிகரித்து பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வேன் என்பதே அவரது முக்கியமான வாக்குறுதியாக இருந்தது.

ஆனால் பட்ஜெட் பற்றாக் குறையை போக்குவதில் ஒபாமா அதிக கவனம் செலுத்தவில்லை என பெரும்பாலானோர் கருத்துக் கூறியுள்ளனர்.

# ராணுவ நடவடிக்கை மூலமாகவே கடாபியை வெளியேற்ற முடியும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(வொஷிங்டன்)

ராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம்தான் லிபிய அதிபர் முகம்மர் கடாபியை ஆட்சியிலிருந்து வெளியேற்ற முடியுமென்று அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்க அதிபரின் இல்லமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜே கார்னே இது குறித்து மேலும் கூறியதாவது -

கடாபி அதிபர் பதவியில் தொடரக் கூடாது என்றுதான் அந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள். அவர் அழைப்பு விடுக்கும் போர் நிறுத்தத்திலும், சமாதானப் பேச்சிலும் மக்களுக்கு நம்பிக்கையில்லை.

கடாபி லிபிய அதிபராகத் தொடரக்கூடாது, தங்களை யார் ஆள வேண்டுமென்பதை லிபிய மக்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்பதே அதிபர் ஒபாமாவின் நிலைப்பாடு. லிபியாவில் ஜனநாயகம் ஏற்பட வேண்டும். நியாயமாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்கே நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். கடாபியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும், அவரின் சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

கடாபியின் கொடூர ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவே சர்வதேச சமூகத்துடன் இணைந்து அமெரிக்கா ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடாபி இப்போது மூழ்கி வரும் கப்பலின் நிலையில் இருக்கிறார். இதற்கு அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்றார் அவர்.



இந் நிலையில் லிபியாவில் கடாபி ஆதரவு படையினருக்கு எதிராக அமெரிக்க கூட்டுப் படை ராணுவம் தொடர்ந்து தாக் குதலில் ஈடுபட்டு வருகிறது. நேட்டோ தலைமையிலான விமானப்படை கடாபியின் ராணுவத்தைக் குறி வைத்து குண்டுகளை வீசி வருகிறது.

லிபியத் தலைநகர் திரிபோலியின் தென்மேற்குப் பகுதியில் இப்போது தாக்குதல் தீவிரமாக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் உள்ள பல சிறிய நகரங்கள் இப்போது கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளில் கடாபியின் ராணுவம் பீரங்கிகள் மூலமும், ராக்கெட் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி வருகிறது. அதே நேரத்தில் அமைதிப் பேச்சுக்கு முன்வந்து அதை தொடர்ந்து நிராகரித்து வருவதாக இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் மாறிமாறிக் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஏற்க முடியாத பல கோரிக்கைகளை முன்வைத்து அதனை நிறைவேற்றினால் தான் போர் நிறுத்தம் என்று கிளார்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாங்கள் தான் ஆட்சியாளர்கள், அவர்கள் கிளர்ச்சியாளர்கள், எனவே நாங்கள் கூறியபடி நடத்து கொண்டால்தான் போர் நிறுத்தம் ஏற்படும் என்று அரசு செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸின் நிலைதான் பா.ஜனதாவிற்கும்

## என்கிறார் சுஷ்மா சுவராஜ்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை காங்கிரசின் நிலைப்பாடு தான் பா.ஜ.வுக்கும், அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்பதே பா.ஜ.வின் முக்கிய கோரிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

கர்நாடகாவிலும் ஆட்சியில் உள்ளதால் பா.ஜ.க என்பது வட இந்தியக் கட்சி என்று கூறக்கூடாது. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை பா.ஜ ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்பெகட்ரம் போன்ற பிரச்சினைகளில் தி.மு.க. வைப் பா.ஜ. எதிர்த்தே வந்துள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தலில் பா.ஜ. சார்பில் 194 வேட்பாளர்கள் போட்டி யிடுகின்றனர்.

சுப்பிரமணிய சாமியும் அவர் தரப்பில் 10 இடங்கள் வரை வேட்பாளரை நிறுத்தியுள்ளார். அவர்களும் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். மொத்தம் 204 இடங்களில் போட டியிடுகிறோம். தமிழகத்தில் எதிர்க்கட்சியாகச் செயற்பட பா.ஜ விருமபுகிறது. இந்தித் திணிப்பை பா.ஜ. எதிர்க்கிறது. தமிழுக்கு எதிரானவர்கள் அல்ல பா.ஜ.வினர்.



பா.ஜ தலைவர்கள் தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் முடிந்தவரை தமிழில் பேச முயற்சிக்கிறோம். மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் தர பா.ஜ. விரும்புகிறது தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்ததற்கு பா.ஜ.வும் ஆதரவு அளித்தது. சட்டசபைத் தேர்தலில் பா.ஜ, வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக அத்வானி, ரவிசங்கர் பிரசாத் மற்றும் ஹேமமாலினி ஆகியோர் தமிழகத்துக்கு வரவுள்ளனர்.

# ஒருநாள் பிரசாரத்தை மேற்கொள்ள தமிழகம் வருகிறார் ராகுல்காந்தி

(சென்னை)

தமிழக சட்டமன்றதேர்தல் நெருங்கி வருவதையடுத்து தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

தி.மு.க. கூட்டணிக்கட்சித் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் நாளையதினம் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி, தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான கருணாநிதி ஆகியோர் ஒரே மேடையில் பிரசாரம் செய்கிறார்கள். இந்த நிலையில்அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி வருகிற நாளை மறுதினம் ஈரோடு வருகிறார். பின்னர் அவர் ஈரோடு மாவட்டத்தில் உள்ள தி.மு.க., காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்



பாளர்கள் காங்கிரஸ் கட்சி வேட பாளர் ஆகியோரை ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

ராகுல் ஈரோடு வருகையையொட்டி அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் நேற்றுக் காலை டெல்லியிலிருந்து ஈரோடு வந்துள்ளார்.

ராகுல்காந்தி தமிழ கத்தில் ஈரோட்டில் மட்டும்தான் பிரசாரம் செய்வதாக இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# இலங்கைத் தமிழர் குறித்துப் பேசும் தகுதியை தி.மு.க கூட்டணிக் கட்சிகள் இழந்து விட்டன


## கம்யூனிஸ்ட் ராஜா தெரிவிப்பு

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப பட்டதற்கு காங்கிரஸ் கட்சியும், தி.மு.க.வுமே முக்கிய காரணம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் து.ராஜா தெரிவித்தார். புதுக்கோட்டை தொகுதியில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் பி. முத்துக் குமரனை ஆதரித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ஊர்தி பிரசாரத்தில் அவர் மேலும் பேசியது -

இலங்கையில் தமிழர்கள் லட்சக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டதற்கு முக்கிய காரணமாக இருந்தது காங்கிரஸ்- தி.மு.க கட்சிகள் தான்.

மன்மோகன்சிங்கின் நட்பு நாடான அமெரிக்கா, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன. அதை விசாரிக்க வேண்டும் எனக் கூறியது. அதேபோல, ஐரோப்பிய நாடுகளும் குற்றச்சாட்டுத் தெரிவித்தன. ஆனால், இந்திய அரசு இலங்கைக்கு நிதியுதவி செய்து தமிழினத்தை அழித்தது. அதே கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் இலங்கை சென்றபோது, அதிபர் ராஜபக்ஷவின் கைகளைக் குலுக்கினார்.

எனவே, தி.மு.க கூட்டணிக் கட்சிகள் இலங்கைத் தமிழர்களைப் பற்றிப் பேசும் தகுதியை இழந்துவிட்டன. அதேபோல, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அதைக் கண்டிக்காமல் மத்திய




அரசுக்கு கடிதம் எழுதினால் எப்படி தீர்வு கிடைக்கும். பணபலத்தின் மூலம் ஜனநாயகப் படுகொலை நடப்பதை தடுப்ப தற்காகவே தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கைகளை முதல்வர் கருணாநிதி விமர்சிப்பதன் மூலம் அவருக்கு தோல்விப் பயம் வந்துவிட்டதையே காட்டுகிறது.

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் சாதனைகளைக் கூறி வாக்குக் கேட்போம் என்கிறார். ஆனால், இந்தியாவில் இதுவரை பதவி வகித்த உள்துறை அமைச்சர்களில் செயற்பாடு இல்லாத அமைச்சர் இவர்தான். தீவிர வாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவுமே திருப்திகரமாக இல்லை. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்படும் ஆட்சி மாற்றம் மூலம் தேசிய அளவிலும் அரசியல் மாற்றம் நிகழும் என்றார்.

# சாய்பாபாவின் உடல்நிலை சீராக உள்ளதாக தெரிவிப்பு

(அனந்தப்பூர்)

சத்ய சாய்பாபாவின் உடல் நிலை குறித்து தொலைக்காட்சிகளில் பல் வேறுவிதமான செய்திகள் வெளிவரும் நிலையில், அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும், கவலைப்படத் தேவையில்லை என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.



எனினும், தொலைக்காட்சிகளில் வெளியான செய்திகளைப் பார்த்து விட்டு சாய்பாபா சிகிச்சை பெறும் புட்டபர்த்தி மருத்துவமனைக்கு ஏராள மான பக்தர்கள் திரண்டு வந்தனர்.

திடீரென சத்ய சாய்பாபாவுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதாகவும், எனினும் செயற்கை சுவாசக் கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் மருத்துவமனை இயக்குநர் ஷாபாயா தெரிவித்தார்.

சத்ய சாய்பாபாவுக்கு செயறகை சுவாசக் கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவரின் உடல்நிலை தற்போது சீராக உள்ளது என மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சத்ய ஷாய்பாபாவின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து மார்ச் 28 ஆம் திகதி அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பெங்களூரில் இருந்து வந்த டாக்டர்கள் குழு ஒன்றும் அவரின் உடல் நிலையைக் கண்காணித்து வருகிறது.

அமைச்சர்கள் ரகுவீர ரெட்டி, கீதா ரெட்டி மற்றும் டி.ஜி.பி அரவிந்தராவ் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் மருத்துவமனைக்கு வந்து சாய்பாபாவின் உடல் நிலை குறித்து விசாரித்தனர். எனினும் சாய்பாபாவின் அறைக்குள் யாரையும் மருத்துவமனை நிர்வாகம் அனுமதிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

# அழகிரிக்கு முன்பிணை

(சென்னை)



மதுரையில் வருவாய்த்துறை அதிகாரி தாக்கப்பட்ட வழக்கில் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

எனவே, அவர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்ற பரபரப்பு நேற்று முன்தினம் மாலை முதலே மதுரையை ஆக்கிரமித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலை மு.க.அழகிரி சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் முன் பிணை மனுத்தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றத்தின் மதுரைப் பிரிவு அவருக்கு முன் பிணை வழங்கி உத்தரவிட்டது.

முன்னதாக, இதே வழக்கில் தொடர்புடைய தி.மு.க.வைச் சேர்ந்த 3 பேர் நேற்றுமுன்தினம் முன் பிணை பெற்றனர்.

# ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில் ராசா மீது குற்றப்பத்திரிகை தாக்கல்



(புதுடில்லி)

ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் ஏல முறையைக் கடைப்பிடிக்காமல், முதலில் வந்தவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக முன்னாள் தொலைத் தகவல் தொடர்புத்துறை அமைசசர் ஆ. ராசா உட்பட 9 பேர் மீது மத்திய புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ.) குற்றப் பத்திரி கையைத் தாக்கல் செய்தது.

இந்த நடவடிக்கையால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு 30,984 கோடி ரூபாய் மட்டுமே என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டில்லியில் இதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சிறப்பு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நீதிபதி ஓ.பி. சைனி முன்னிலையில் சனிக்கிழமை இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யபபட்டது. 80,000 பக்கங்களைக் கொண்ட இந்தக் குற்றப்பத்திரிகையில் மத்திய அரசின் தலைமை அரசு வழக்கறிஞர் குலாம் இ வாஹன்வதி, அதிகாரத் தரகர் நீரா ராடியா உட்பட 125 பேர் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. அமைப்பு இந்த மாத இறுதிக்குள் கூடுதல் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வதாகவும் மே 31 ஆம் திகதிக்குள் இந்த வழக்கில் விசாரணையை முடித்து விடுவதாகவும் நீதிபதியிடம் தெரிவித்தது.

இந்த வழக்குத் தொடர்பான குற்றப்பத்திரிகை, ஆவணங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், இதர ஆதாரங்கள் ஆகியவற்றைப் படித்துப் பார்த்ததாகவும் இந்த வழக்கைத் தொடரப் போதிய காரணங்களும் ஆதாரங்களும் இருப்பதாகத் தமக்கு திருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் இனி வழக்கு விசாரணையைத் தொடரலாம் என்றும் நீதிபதி ஓ.பி. சைனி குறிப்பிட்டார்.

# கடற்படையினர் காணாமற்போனதை அடுத்து வடக்கில் தேடுதல் எதுவும் நடத்தப்படவில்லை

## இராணுவப் பேச்சாளர் உபயமெதவல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

**'முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் படையினர் எவ்வித சுற்றிவளைப்பையும் நடத்தவில்லை என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல்ல தெரிவித்தார்.**

சாலை கடற்படைத் தளத்தில் இருந்து சுண்டிக்குளம் நோக்கி 4 இலங்கைக் கடற்படையினருடன் புறப்பட்ட படகு ஒன்று கடந்த 29ஆம் திகதி மாலை காணாமற் போனது.

இதையடுத்து 31ஆம் திகதி அதிகாலை முதல் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கின் பல பகுதிகளையும் இலங்கைப் படையினர் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தியதாக ஊடகங்களில் வெளியான செய்தியை இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல்ல மறுத்துள்ளார்.

நான்கு கடற்படையினர் காணாமற்போனது உண்மை. அவர்கள் சென்ற படகு சேதமின்றி வெற்றிலைக்கேணியில் மீட்கப்பட்டுள்ளது.

காணாமற்போன கடற்படையினரைக் கடலில் தேடும் பணி தொடர்கிறது.

இலங்கைத் தீவைச் சுற்றி படையினர் நிலைகொண்டுள்ளனர். இந்தநிலையில் அவர்கள் சுற்றிவளைப்பு எதையும் நடத்தவில்லை.

சில தகவல்களை அடுத்து அவர்கள் தேடுதலில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கே படையினர் அங்கு உள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

இதனிடையே மர்மமான முறையில் காணாமற் போயுள்ள இலங்கை கடற்படையினர் நால்வரையும் தேடும் பணிகளும் விசாரணைகளும் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக இலங்கை கடற்படை கூறியுள்ளது.

ஆயுதம் தரிக்காத கடற்படையினர் நால்வரும் சுண்டிக்குளம் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் படகுகள் காணப்பட்ட பகுதிக்குள் சென்றனரா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இவர்கள் சாதாதரண மீன்பிடிப் படகிலேயே சென்றிருந்தனர். கடற்படையினரின் படகில் சென்றிருக்கவில்லை.

எனவே இலங்கை கடற்படையினருக்கும் இந்திய மீனவர்களுக்கும் மோதல் நிகழ்ந்திருக்க வாய்ப்புகள் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

போர் நடைபெற்ற காலங்களில் கூட இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கவில்லை.

அவுஸ்ரேலியா அல்லது மேற்கு நாடுகளில் அடைக்கலம் கோரும் நோக்கில் இந்தக் கடற்படையினர் கப்பல் அல்லது பாரிய இழுவைப் படகில் ஏறித் தப்பியிருக்கலாம் என்ற தகவலையும் கடற்படை வட்டாரங்கள் நிராகரித்துள்ளன.

அதேவேளை இந்தப் படகில் சென்ற கடற்படையினர் ஆயுதங்களின்றிச் சென்றதாக இலங்கை கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ள போதும், கரையொதுங்கிய அவர்கள் சென்ற படகில் இருந்து மூன்று தன்னியக்கத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை கடற்படை, பொலிஸ், இராணுவம் என்று பல்வேறு பிரிவுகளும் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை நடத்தி வருகின்ற போதும்- காணாமற்போன படையினர் குறித்த எந்தத் துப்பும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## 10 பில்லியனாக அதிகரிக்கும்

(கொழும்பு)

மத்திய வங்கியின் தகவலின் அடிப்படையில் இவ்வருடத்தில் ஏற்றுமதி மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் பத்து பில்லியன் அமெரிக்க டொலரைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி வருமானத்தின் மூலம் 72.4 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 813 மில்லியன் அமெரிக்க டொலராகும். தைத்த ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்தியிலான பொருட்களின் ஏற்றுமதியால் இந்த வருமான அதிகரிப்பு ஏற்பட்டது.

தைத்த ஆடைகள் மற்றும் இதர பொருட்களின் ஏற்றுமதி மூலம் ஜனவரி மாதத்தில் மட்டும் 385 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகப் . பெறப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் மாதங்களில் வாசனைத் திரவியங்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் ஏற்றுமதிகள் மூலம் ஏற்றுமதி வருமானம் மேலும் அதிகரிக்கும்.

கடந்த வருடம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றத்தினால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகளுக்குக் கூடுதலான கேள்விகளும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாகிஸ்தான் தூதுவருடன் பிரதி அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில் பதில் வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் சீமா ஹஹய் பலோச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தான் உடனடியாக வழங்கிய உதவிகளுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார். மேலும் இரு நாட்டுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் மற்றும் இரு நாட்டுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

## சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)


கிழக்கு மாகாண சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் மற்றும் சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுவர்களே இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சிறுவர்களைப் பொறுப்பேற்கும் உறவினர்களுக்கு மாதாந்த பராமரிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ள சிறுவர்களை உறவினர்கள் சமூகத்தில் வழிநடத்தும் விதம் குறித்து அவதானிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச, தனியார் பெயர்ப்பலகைகளில் மும்மொழிகளையும் பொறிக்கவும்

### அமைச்சர் வாசுதேவ கோரிக்கை



(கொழும்பு)

அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனப் பெயர்ப் பலகைகளில் காணப்படும் விபரங்களை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிடுமாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மூன்று மொழிகளில் அச்சிடப் படாவிட்டாலும் குறைந்தளவு தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளிலாவது பெயர்ப் பலகைகளை அச்சிடுமாறு அவர் வேண்டியுள்ளார்.

விசேடமாக கொழும்பில் சில நிறுவனங்களின் பெயர்ப் பலகை ஆங்கில மொழியில் மாத்திரம் போடப்பட்டிருப்பதால் பொது மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாக அமைச்சர் வாசுதேவ சுட்டிக் காட்டியுள்ளார்.

### 2002 - 2009 வரையான காலப்பகுதியில்

## புலிகள் மிரட்டிப் பணம் பறித்தார்கள் நோர்வே தமிழர் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தினர் 2002 ஆம் ஆண்டுப் பகுதியில் தனது வீட்டிற்கு வந்து கொலைமிரட்டல் விடுத்து 2009ஆம் ஆண்டு வரை பலவந்தமாக பணம்பறித்தாக நோர்வேவாழ் இலங்கைத் தமிழர் ஒருவர் நோர்வேயில் புலிகள் இயக்கத்தினர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

நடராஜா சேதுரூபன் வயது 33, வடமராட்சி பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

இவர் பதிவு செய்துள்ள வழக்கில் நோர்வே நாட்டுக்கான தலைநகரான ஒஸ்லோவில் புலிகளுக்கான நிதிப் பொறுப்பாளர் பாலன் பிரதிவாதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் (TRO) அமைப்பு, புலிகளின் தலைமையகம் எனப் பேசப்படுகின்ற (TCC) எனப்படும் தமிழர் ஒருங் கிணைப்புக்குழு, புலிகளின் பாராளுமன்றம் எனப் பேசப்படுகி ன்ற ஈழத் தமிழரவை போன்ற அமைப்புக்கள் இக்கொலைமிரட்டல் பணவசூலிப்புக்கு உடந்தைகளாக இருந்து வந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலுள்ள விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் தனது வங்கியிலிருந்து புலிகளின் வங்கிக் கணக்குக்கு நிதி பரிமாறப்பட்டமைக்கான ஆதாரமும், நிதியினைப் புலிகள் பெற்றுக்கொண்டதாக புலிகள் வழங்கியிருந்த பற்றுச்சீட்டுக்களும் ஆதாரங்களாக பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வழக்காளிக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

நோர்வேயில் பணம்தர மறுத்தால் இலங்கையில் உங்கள் உறவினர்கள் துன்புறுத்தப்படுவார்கள் என சேதுரூபனிடம், புலிகளின் நிதிப்பொறுப்பாளர் பாலன் தெரிவித்ததான ஒலிப் பதிவுகளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருகின்றது. முறைப்பாட்டில் புலிகள் தன்னிடம் பெற்றுக்கொண்ட முழுப் பணத்தையும் பெற்றுத் தருமாறு சேதுரூபனால் வேண்டப்பட்டுள்ளது.

## புலிகளின் 39 படகுகள் மாங்குளம் பகுதியில் மீட்பு

மாங்குளம் - நட்டாங்கண்டல் வனப் பிரதேசத்தில் பொலித்தினால் பொதியிட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த புலிகள் இயககத்திற்கு உரித்தானது எனக் கருதப்படும் 39 படகுகள் மீட்கப்பட்டுள்ளன.

மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படைக் குழுவிற்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் இந்தப் படகுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நட்டாங்கண்டல் பிரதேசத்தில் அடர்ந்த காட்டில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு பொதியிடப்பட்டிருந்த படகுகள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக மாங்குளம் பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த படகுகள் மோதல் இடம்பெற்ற காலத்தில் யாழ்ப்பாண குடாநாட்டில் தாக்குதல் மேற்கொள்வதற்காகவே மறைத்து வைக்கப்பட்டிருக்க லாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

# அரசியல் கைதிகளுக்கு விடுதலை வேண்டும் ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பில் நல்லிணக்கம் மற்றும் சக வாழ்வின் பேரில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இது குறித்து தெரிவிக்கையில் -

இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் 206 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றம்சாட்டப்பட முடியாத நிலையிலும் பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது மனிதாபிமான மற்ற செயலாகும். எதிர்வரும் தமிழ்சிங்கள புதுவருட பிறப்பில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்களென்று அவர்களது தாய்மார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு குற்றத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இந்த அரசியல் கைதிகள் இன்று தங்களுடைய உறவுகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பர்.

குற்றமிழைக்கத் துணை போனவர்கள் கூட தண்டனை, புனர்வாழ்வு, மறுவாழ்வு, புது வாழ்வு என தமது தவறை உணர்ந்து புதிய பாதையிலேயே காலடி எடுத்து வைக்கின்றனர். தாய்மார்கள், இளம் துணைவியர் மற்றும் அவர்களது குழந்தைகள் விளக்கமறியலிலும் வீடுமென தமது வாழ்வின் ஒரு பகுதியை பல வருடங்களைத் துயரத்தில் கழிக்கின்றனர்.

நேரடியாகக் குற்றம் இழைத்தவர்களுக்கு இன்று கிடைத்திருக்கும் அந்தஸ்தும் வாழ்வும் அரசியல் கைதிகளுக்கு இல்லையென தாய்மார்கள் அவலப்படுகின்றனர். அவர்களது கண்ணீர் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன் வைக்கின்றேன்.

இந்த மனிதாபிமான கோரிக்கையை ஏற்று எதிர்வரும் தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பில் நல்லிணக்கம் மற்றும் சக வாழ்வின் பெயரால் இவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி உத்தர விட வேண்டுமெனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.


அரசியல் கைதிகள் எந்த நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டுமென நாம் தொடர்ந்து கோரிவருகின்றோம். நீண்டகாலமாக எந்தக் குற்றமும் சுமத்தப்படாது நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாதுள்ளதால் இவர்கள் மீது குற்றச்சாட்டு இல்லையென்பதே கருத்தாகும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் தனிப்பட்ட முறையில் குற்றம் செய்யவில்லை.

பல ஆண்டுகளாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென நாம் தொடர்ந்து கோரிவருகின்றோம்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சின் போதும் இது குறித்து பேசியதாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார் என்றும், எனவே இவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தி புது வருடத்தில் இவர்கள் சமூகத்துடன் வாழ நடவடிக்கை எடுக்குமாறும் புதிய ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தெரிவித்துள்ளார்.

# ஹஜ் நடவடிக்கைக்கு பௌசி நியமனம்



(கொழும்பு)

2011 ஆம் ஆண்டின் ஹஜ்ஜுக்கு பொறுப்பாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் நியமித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கான ஹஜ் கமிட்டி கூட்டத்திற்காக ஏப்ரல் 24-27 ஆம் திகதிகளில் சவூதி அரேபியா செல்லவுள்ளதாகவும் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஹஜ் செல்லும் இலங்கை முஸ்லிம்களுக்கு முறையான வசதிகள் மக்கா மதினா தங்குமிடம் வைத்திய வசதிகள் போக்குவரத்து முறைகள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படும். சுகாதார அமைச்சின் அங்கீகாரத்துடன் முஸ்லிம் வைத்தியர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.

கடந்த வருடம் 5800 ஹாஜிகள் இலங்கையிலிருந்து மக்கா சென்றுள்ளனர். அவர்களுக்கு உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. இது ஒரு புனித இஸ்லாம் மத அனுஷ்டானமாகும். ஹஜ் முகவர்கள் அநீதி இழைத்தால் அவர்களது முகவர் அனுமதி நீக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பெருந்தோட்ட கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் இன்று

(கொழும்பு)

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு கூட்டு ஒப்பந்த பேச்சு வார்த்தைகள் இன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இடம்பெறும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் தோட்ட தொழிற்சங்க கூட்டு கமிட்டி ஆகிய தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் மார்ச் மாதத்துடன், நிறைவடைந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

கைச்சாத்தான கூட்டு உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் நோக்கில் இன்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

மகிந்த ராஜபக்ஷ மும்பை சென்றமைக்கு எதிராக அவர்கள் கோஷங்களை எழுப்பியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மகிந்தவின் கொடும்பாவி யொன்றையும் எரித்தனர். எனினும் அது பொலிஸாரால் அணைக்கப்பட்டது.

## அரசுக்கு...

படைகள், பொலிஸ், கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியம்அதிகரிக்கப்பட வேண்டும் என அவர் கூறினார். இலங்கையர்கள் மும்பையில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியால் ஈர்க்கப்பட்டிருந்த நிலையில் அதை எரிபொருட்கள் மற்றும் காஸ் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டதாகவும் ரணில் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சி....

முறையின் கீழ் 30 சதவீத மும், தொகுதி அடிப்படையில் 70 சதவீதத்திலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச் சர் தெரிவித்தார். குறித்த சட்டமூலத்திற்காக, திருத்தங்களுடன் ஆதரவை வழங்கத் தாம் எதிர்ப்பார்த்துள்ள தாக ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மகிந்த....

சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் ஜனாதிபதி நேற்று அதிகாலை 3 மணி 5 நிமிடம் அளவில் கட்டுநாயக்காவை வந்தடைந்ததார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென் இந்தியாவில் திருப்பதி தேவஸ்தானத்திற்கும் சென்று வழிபட்டார். அத்துடன் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலை சந்தித்து உரையாடியதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## முன்னாள் இராணுவத்தினருக்கு....

இந்த முன்னாள் இராணுவத்தினரின் திறமைகளைச் சோதித்த 'இரவுப் பறவைகள்' என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று இவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கியிருக்கிறது. குறிப்பிட்ட இந்தத் தனியார் பாதுகாப்பு அமைப்பானது ஈராக்கிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சின்கீழ் பதியப்பட்டதாகவும்,

நேற்றுக்கூட அவர்களுக்கான ஊதியத்தினை வழங்காமல் இருவர் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் வெறுமனே 100 டொலர்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது என்கிறார் லலித் குமார.

ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 18,000 டொலர் பணம் ஊதியமாக வழங்கப்படும் என இந்த நிறுவனம் தங்களுக்கு உறுதியளித்ததாக இவர் கூறுகிறார்.

ஆரம்பத்தில் ஒரு சில மாதங்கள் எமக்கான ஊதியம் வழங்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டுமான நிறுவனமானது தான் முன்னெடுத்த வீட்டுத் திட்டத்தினை முறையாக மேற்கொள்ளவில்லை எனக்கூறி அரசாங்கம் இதனுடனான ஒப்பந்தத்தினை இடை நிறுத்தியதைத் தொடர்ந்தே எமக்கான ஊதியம் வழங்கப்படவில்லை என்கிறார் அவர்.

லெபனானிலுள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரி பிரேமரத்தின தங்களைப் பணிக்கு அமர்த்திய நிறுவனத்துடன் பேசி வருவதாகவும் இந்த மாதத்தின் இறுதிக்குள் தமக்குக் கிடைக்கவேண்டிய மிகுதிப் பணத்தினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருப்பதாகவும் இவர்கள் கூறுகிறார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காக தாங்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் இடத்தினை விட்டு வெளியே செல்லவேண்டாம் எனப் பணிக்கப்பட்டி ருப்பதாகவும் டீ சில்வா கூறுகிறார்.

அல் சமாரா என்ற இந்த கிராமத்திற்கு நாங்கள் வருகைதந்தது முதல் இன்னமும் வேறு எங்குமே வெளியில் செல்லவில்லை என இந்த முன்னாள் இராணுவத்தினர் கூறுகிறார்கள்.

தங்களது கட்டுமான நடவடிக்கைகள் இடைநின்று போனமையினால் கடந்த வாரத்திலிருந்து தங்களுக்கு உணவு வழங்கப்படவில்லை என லலித் டீ சில்வா கூறுகிறார். கிராமத்தவர்கள் தங்களுக்கு உணவு வழங்குவதாகவும் அருகிலுள்ள வாய்க்காலிலிருந்து தாங்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதாகவும் இவர்கள் கூறுகிறார்.

## தனிமையில் வாழும்...

இத்தகைய முதியவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு எவ்வித திட்டங்களும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என Help Age Sri Lanka எனும் நிறுவனத்தின் இயக்குனர் Samantha Liyanawaduge குறிப்பிடுவதாக இந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. இது குறித்து இந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த போர் இறுதியில் மையம் கொண்டிருந்த வன்னிப் பிராந்தியத்தில் தற்போது 60 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் சுமார் 30,000 பேர் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் போரின் பின்னர் மீளக் குடியேற்றப்பட்டவர்கள் மத்தியில் வசிக்கும் முதியவர்கள் தனிமையை உணர்வதாகவும், தங்களது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வறுமை, தனிமை, பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிலை, போசாக்கின்மை மற்றும் போதிய மருத்துவ வசதியின்மை ஆகியவற்றை குடும்ப உறவுகள் எவருமற்ற நிலையில் தனியாக வசிக்கின்ற முதியவர்கள் எதிர்கொள்கிறார்கள்.

இவர்கள் தாங்கள் கைவிடப்பட்டதாக உணர்வதால், சிறு பிரச்சினைகளுக்கும் வேகமாகக் கோபமடைவதாக குறிப்பிடும் கிளிநொச்சியிலுள்ள கத்தோலிக்க மதகுருவான செல்லையா பிலிப் நேசகுமார், வயதானவர்கள் தங்களின் மனங்களில் போரினால் ஏற்பட்ட வடுக்களை இன்னமும் சுமப்பதாக கூறுகிறார்.

வன்னிப் போர் முடிவடைந்த பின்னர் நிலைமைகள் சீராகும் எனத் தான் நம்பியதாகக் குறிப்பிடும் கிளிநொச்சியில் வசிக்கும் 61 வயதான வீரன் பாண்டியன், வாழ்க்கையைத் தினமும் கழிப்பதற்கு உதவிக்கு எவரும் அற்ற நிலையில் தாங்களே தங்களின் வாழ்வை பார்த்துக் கொள்ளவேண்டி இருப்பதாக தெரிவிக்கின்றார். போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளால் வயது முதிர்ந்தவர்கள் எவ்வித நன்மைகளையும் பெறவில்லை என இந்த முதியவர் சுட்டிக்காட்டுவதுடன், தாங்கள் முக்கியமானவர்கள் என்றால் தானே தங்களை எவரும் கவனிப்பார்கள் என ஆதங்கப்படுகின்றார்.

1986 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள முதியவர்களின் நலன்கள் தொடர்பில் Help Age Sri டுயமெய என்ற நிறுவனம் செயற்பட்டு வருகின்ற போதிலும், இந் நிறுவனத்துக்கான வளங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் முக்கிய தேவைகளைக் கொண்டுள்ள முதியவர்களின் நலன்களை மட்டும் இந் நிறுவனம் கவனித்து வருகின்றது.


வன்னியில் தனது சேவைகளை முதியவர்களுக்கு வழங்கும் வகையில் இந் நிறுவனம் கடந்த பெப்பிரவரி மாதம் கிளிநொச்சியில் தனது கிளை ஒன்றைத் திறந்திருக்கிறது.

முதியவர்கள் பலருக்கு கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், இதுவரை தங்களின் வைத்தியர்கள் நூறு முதியவர்களை பரிசோதித்து இருப்பதாகவும் இந் நிறுவனம் தெரிவிக்கின்றது. இவர்களில் 60 சதவீதமான முதியவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடும் இந் நிறுவனம், 20 தொடக்கம் 30 சதவீதமானவர்களுக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கின்றது.

இந் நிறுவனம் இலவச கண் மருத்துவமனை ஒன்றை கொழும்புக்கு அண்மையில் நடாத்தி வருகின்ற போதிலும், முதியவர்கள் நீண்ட தூரம் பயணித்து இந்த மருத்துவமனைக்குச் சென்று தமக்கான சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியாத அளவிற்கு உடல் நிலை பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

வவுனியாவிலுள்ள மருத்துவமனையில் தமக்கான சிகிச்சையை பெறுவதைவிட இவர்களுக்கு வேறு வழியில்லாத போதிலும், 55 டொலர்களை செலவழித்து குறிப்பிட்ட சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு பெரும்பாலானவர்களிடம் பணம் இல்லை. இந்நிலையில், முதியவர்கள் தமக்கானதொரு வருவாயைத் தேடிக் கொள்ளும் வகையில் விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இந் நிறுவனம் எண்ணியுள்ளது.பெரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் இந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் அதிகம் இருக்கின்ற போதிலும், தமது நிறுவனத்துக்கான நிதி வளங்களும் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதாக இந் நிறுவனத்தின் இயக்குனர் Samantha Liyanawaduge குறிப்பிடுகின்றார் என இந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து மிக விரைவில் அரசின் கவனத்தை ஈர்க்கவும் இப்பிரச்சினைக்கு சாதகமான தீர்வை எட்டுவதற்கும் பல தரப்பினரும் முயற்சி எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.



...வாந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.



# குற்றச் செயல்களைக் களைவது எப்படி?

# "சார்க்" நாடுகளின் காவல்துறைகளின் கூட்டம்

## கொழும்பில் ஒன்று கூடி ஆராய்வு

(கொழும்பு)

சார்க் நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் மா அதிபர்கள் இன்று கொழும்பில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர். இந்த மாநாட்டில், சார்க் நாடுகளில் இடம்பெறும் குற்றச் செயல்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது குறித்து, சார்க் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சார்க் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் கூடித் தமது பிராந்திய பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்கான மாநாட்டின் முன்னோடி மாநாடாக பொலிஸ் மா அதிபர்கள் ஒன்று கூடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும், நாளையும் நடைபெறும் இந்த மாநாட்டில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம், இந்தியா, பாக்கிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொள்கின்றனர். அதேவேளை, சார்க் நாடுகளின் பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொள்ளும் ஒன்பதாவது மாநாடு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் ஆர்ப்பாட்டம் சுவிஸ் தலைநகரில் நடந்தது

## இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோரிக்கை

(பேர்ன்)

சுவிட்ஸர்லாந்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் சுவிட்ஸர்லாந்து தலைநகர் பேர்னில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமாகவுள்ளதால் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அவர்கள் கோரினர்.

யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நிலைமை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் அரசியல் தஞ்சம் கோருவோர் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களுக்கு திரும்பிச் செல்லலாம் என சுவிட்ஸர்லாந்தின் சமஷ்டி குடிவரவு அலுவலகம் இவ்வருட முற்பகுதியில் தெரிவித்தது.

எனினும், தமிழர்கள் இலங்கைக்கு திரும்பினால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்படுவர் என ஈழத் தமிழர்களின் சுவிட்ஸர்லாந்து கவுன்ஸில் கூறுகிறது.

போர் குற்றச்சாட்டுகள் குறித்த சர்வதேச விசாரணையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அவசரகால சட்டத்தை நீக்கினால் மாத்திரமே அகதிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருட இறுதியில் 2100 இலங்கை அகதிகளின் அரசியல் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருந்ததாக சுவிட்ஸர்லாந்து சமஷ்டி குடிவரவு அலுவலகம் தெரிவித்திருந்தது.

# 'தேசமாமக்க ஜனப்பிரசாதன லங்கா புத்திர' ரம்புக்வெலவுக்கு கௌரவம்



(கொழும்பு)

பௌத்த மதத்தினரின் உயர் பீடங்களில் ஒன்றாக விளங்கும் கண்டி அஸ்கிரிய மகா பீடத்தினால் தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சரான ஹெகலிய ரம்புக்வெலவுக்கு "தேசமாமக்க ஜனப்பிரசாதன லங்கா புத்திர" எனும் கௌரவப் பட்டம் நேற்று வழங்கப்பட்டது.

இந்த கௌரவ பட்டம் வழங்குவது தொடர்பாக அஸ்கிரிய பீடம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஹெகலிய ரம்புக்வெல எனும் பெயர் இந்நாட்டு மக்களிடையே பிரசித்தி பெறுவதற்குக் காரணமாக அமைந்தது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்து அவரால் உருவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையமும் அதன் ஊடகப் பேச்சாளர் பாத்திரமுமாகும் என அஸ்கிரிய பீடம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தை யுத்த ரீதியில் தோல்வியடையச் செய்வதற்கு அதன் பிரச்சார வலையமைப்பை செயலிழக்கச் செய்தல் வேண்டும் என்பதனை நன்குணர்ந்த ஹெகலிய ரம்புக்வெல, தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தை ஆரம்பித்து அதற்கு தலைமை தாங்கி அதன் ஊடகப் பேச்சாளராக தமது திறமையை தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக பயன்படுத்தினார். அவரிடம் காணப்பட்ட மொழி ஆற்றல், ஆழமான பேச்சுத்திறன் மற்றும் உறுதியான நேரடியான பதில்கள் என்பவற்றின் காரணமாக பயங்கரவாதிகளுக்குச் சார்பான உள்ளூர், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மௌனிகளாக்கப்பட்டனர். இச் சேவையைப் பாராட்டி அவருக்கு கௌரவப்பட்டம் வழங்கப்படுவதாக அஸ்கிரிய பீடம் மேலும் தெரிவித்துள்ளது.

# தொலைத்தொடர்பு கோபுரங்களால் ஆபத்து நாடு தழுவிய ஆய்வுக்கு அரசு ஏற்பாடு


(கொழும்பு)

தொலைத்தொடர்பு கோபுரங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது மக்களிடமிருந்து கிடைத்த பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளையடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

மின்னல் காரணமாக தமது வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாகக் குடியிருப்பாளர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வலையமைப்புகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்மசிறி டி அல்விஸ் தெரிவித்தார்.

செல்லிடத் தொலைபேசி வலையமைப்புகள் அதிகரித்துள்ள நிலையில் தொலைத் தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதனால், தமது ஆரோக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம் எனவும் மின்னல் தாக்கம் ஏற்படுமெனவும் குடியிருப்பாளர்கள் சிலர் கருதுகின்றனர் என அவர் கூறினார். உலக தரத்திற்கேற்ப இக்கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றினால் ஏற்படும் மின்னல் தாக்கத்தின் அளவு குறித்துத் தீர்மானிப்பது கடினம். பொதுமக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளை நாம் உதாசீனப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார்.



## எரிகாயங்களுடன் பெண் மருத்துவமனையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக பெண் ஒருவர் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி எரியுண்ட சம்பவம் ஒன்று நேற்று யாழ்.குருநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான ராஜேஸ் லக்சிகா (வயது-22) என்பவரே தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி எரித்துள்ளார்.

குறித்த பெண் தற்போது யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிசிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிது. (52)

## வன்முறைக்கு....

காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அரசியல் நோக்கத்திற்காகவும், இனவாத சிந்தனையுடனும் செயற்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு தாமதமின்றித் தீர்வு அரசிடம் கோரிக்கை விடுக்கிறார் ரணில்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கம் தீர்மானமொன்றிற்கு வரவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில், இதனை மேலும் இழுத்தடிக்க முடியாதெனக் கூறியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் பசறை பிரதேச சபையை ஐ.தே.க. கைப்பற்றியுள்ளது. அச்சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண, பதவியேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றபோதே அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.தே.க. மறுசீரமைக்கப்பட்டு கட்சிக்குள் ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. உறுப்பினர்களைப் பலப்படுத்திக் கட்சியை பழைய நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன் அரசாங்கம் இதனைச் செய்யாவிடின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு ஐ.தே.க. செல்லும்.

இனப்பிரச்சினை குறித்து அரசு அக்கறையின்றி உள்ளது. யுத்தம் முடிவடைந்த நிலையில் அப்பகுதி மக்கள் நெருக்கடியான நிலையில் உள்ளனர். தீர்வுகாண வேண்டுமென முதலில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை அரசு உருவாக்கியது. அக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.


## டோகா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| | வெற்றிடம் | எண்ணிக்கை | முன்னனுபவம் | ஊதியம் டோகா கட்டார் | ஊதியம் இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1) | இலகு ரக வாகன ஓட்டுனர் | 05 | Gcc Experien and Licennce | 1200 | 37,200/= +OT |
| 2) | Auto Mobile Mechanic & Auto Mobile Electrican | 02 | Experiencer in Froeign Vehicles | 1200 | 37,200/= +OT |
| 3) | கட்டட மின்னினைப்பாளர் | 05 | ——— | 1000 | 31,[illegible]00/= +OT |
| 4) | உதவியாளர் | 20 | ——— | 900 | 27,900/= +OT |

மேற்குறிப்பிட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்குப் பணியாளர்கள் உடனடியாக வேண்டப்படுகின்றார்கள்.

நேர்முகப்பரீட்சை 25.03.2011 லிருந்து அனைவரினதும் வேண்டுகோளிற்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.

நேரம்:- காலை 10.00 am - 4.30 p.m வரை நடைபெறும்.

தங்குமிடம், வைத்திய, போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுக்கொடுப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்படும். மேலதிகநேரம் வேலை செய்பவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.

வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். வாரத்தில் 6 நாட்கள். ஏனையவை டோகா கட்டார் ஊழியர் சட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.

Avon International (PVT) Ltd
# 138, Kanakaratnam Road
Ariyalai, Jaffna 40000 - Srilanka

முன்பதிவுகளுக்கு: T.P- 0215676676, 0215679679 Hotline - 0759115111
E.mail - avon lk @ rocket mail .com (C/640)


## இடம்பெயர்ந்த....

தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திரு கோணமலை மாவட்டத்திலேயே குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதுதவிர, மன்னார் மாவட்டத்தில் சுமார் 400 பேர் தன்னிச்சையாகவும், தமது பழைய இருப்பிடத்திற்கு சென்றுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் தூதுவராலயம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாத மோதலின் பின்னர் இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த 3 ஆயிரத்து 200 இலங்கை அகதிகள் நாடுதிரும்பவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பு துணை புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவராலயத்தினால், அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களுக்கு அமைய கடந்த 2010ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையிலான காலப் பகுதியினில் 1 லட்சத்து 46 ஆயிரம் அகதிகள் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 64 நாடுகளில் வாழ்ந்து வருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவர்களில் 32 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில் உள்ள 112 முகாம்களில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 32 ஆயிரம் பேர் முகாம்களுக்கு வெளியே வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ் அகதிகள் பெரும்பாலும் பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, சுவிஸ்சர்லாந்து, மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலேயே அதிக அளவில் வாழ்வதாகவும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவராலயத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**30 ஆம் 31 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.**

30. மரம், கதவு, சூரியன் 1) அடைமொழி 2) பெயர்ச்சொல் 3) வினைச்சொல்

31. அடித்தான், படிப்பான், குடிக்கிறான் 1) வினைமுற்று 2) பெயர் அடைமொழி 3) எச்சம்

**32ஆம் 33ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழே கோடிடுக.**

32.
1) பெரியோர் சொல்கேட்டு நடத்தல் நன்று
2) பெரியோர் சொல்லைக் கேட்டு நடத்தல் நன்று
3) நன்று பெரியோர் சொல் கேட்டு நடத்தல்


33.
1) இரக்கமற்றவர்களுடன் பழகுவது தவறு
2) இரக்கமில்லாதவர் பழக்கம் தவறு
3) இரக்கம் குறைந்தவர்களிடம் பழகுவது தவறு

**34 ஆம் 35 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

34. கமலன் நல்ல முயற்சியோடு படித்தும் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1. பரீட்சையின் போது கமலனின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தமை
2. பரீட்சையின்போது கமலனினால் சரியானை விடைகளை எழுத முடியாமல் இருந்தமை
3. கமலன் நினைத்ததைவிட வினாத்தாள் இலகுவாக இருந்தமை

35. சிறுவன் ஒருவன் சரியான முறையில் கட்டிய பட்டத்தைக் கொண்டு சென்று பறக்கவிட்டான். ஆனால் அது வானத்தில் பறக்கவில்லை. பட்டம் பறக்காமைக்குப் பொருத்தமான காரணம்.
1. பட்டம் சரியின்மை 2. அவனின் நண்பன் இல்லாமை 3. காற்று இல்லாமை

**36 தொடக்கம் 40 வரையான வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை, குறிப்பிடப்படும் திசை வழி பார்க்கும்போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழே கோடிடுக.**


36.


(1) (2) (3)


37.


(1) (2) (3)


38. இம்முறி கோட்டின் படி மடித்து வெட்டினால் கிடைக்கும் வடிவம்


(1) (2) (3)

39. உரு A ஆனது தராசின் இருபக்கமும் சமமாக உள்ள நிலையைக் காட்டுகின்றது.




இதன்படி உரு B இல் உள்ள தராசை சமன் செய்ய வேண்டிய உரு?




40. வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


(1) (2) (3)






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்



# கல்வி முரசு

வெளியீடு 08




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழ் வரும் படத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.**




1. டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்த வீரர் யார்?
1. சனத்ஜெயசூரிய 2. முத்தையா முரளிதரன் 3. சௌரவ் கங்குலி
2. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை சுவீகரித்த அணி எது?
1. இந்தியா 2. இலங்கை 3. பாகிஸ்தான்
3. எந்த நாட்டு வீரர் தக்கவைத்திருந்த சாதனையை முரளிதரன் கைப்பற்றினார்?
1. பாகிஸ்தான் - அப்ரிடி
2. அவுஸ்ரேலியா - சேன்வோன்
3. இந்தியா - கபில்தேவ்
4. கூடுதலாக டெஸ்ட் விக்கட்டுகளைக் கைப்பற்றிய சாதனையை முரளிதரன் எந்த நாட்டில் படைத்தார்?
1. இந்தியா 2. இலங்கை 3. அவுஸ்ரேலியா
5. படத்தில் முரளிதரனுக்குப் பின்னால் நிற்பவர் யார்?
1. சிறந்த பார்வையாளர் 2. சிறந்த நடுவர் 3.சிறந்த பந்துவீச்சாளர்

**கீழே தரப்பட்ட படத்தை அவதானித்து வினாக்களுக்குப் பொருத்தமான இலக்கங்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**




6. தரைப் போக்குவரத்துக்குரிய சாதனங்களின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................

7. ஆகாயப் போக்குவரத்துக்குரிய சாதனங்களின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................

8. கடல் போக்குவரத்திற்குரிய போக்குவரத்துச் சாதனங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

9. தம்புள்ள சந்தையில் இருந்து கொழும்புச் சந்தைக்கு மரக்கறிகளை ஏற்றுவதற்கு எப்போக்குவரத்துப் பயன் படுத்தப்படும்?
1. தரைப்போக்குவரத்து 2. கடல்போக்குவரத்து 3. ஆகாயப் போக்குவரத்து

10. அவசர நோயாளியை மருத்துவ சிகிச்சைக்கு வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லும் போக்குவரத்து
1. கடல் போக்குவரத்து 2. தரைப் போக்குவரத்து 3. ஆகாயப் போக்குவரத்து

## கீழே தரப்பட்ட தகவல்களை வாசித்து நன்கு விளங்கிச் சரியான விடையைத் தெரிவு செய்க.

**11. வெப்பத்தில் சில பொருட்கள் விரிவடைகின்றன.**

இதனை நாளாந்த வாழ்வில் நாம் அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பம்.

1) கோடை காலத்தில் மின்கம்பி, தந்திக்கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்.
2) குளிரான மாரிகாலத்தில் மின்கம்பி, தந்திக் கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்.
3) வண்டில் சில்லுக்கு வளையம் இடும்போது மரச்சில்லானது சூடுகாட்டப்படுகின்றது.

**12. ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்**

1) மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழங்க ஓசை கேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன.
2) ஓட்டப்போட்டியின் போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது.
3) மேற்கூறிய (1) உம் (2) உம் சரியானவை.

**13. பூமியானது உருண்டை வடிவமானது.**

இதனை மெய்ப்படுத்தும் சான்று.

1) நாங்கள் நடமாடும்போது தலை சுற்றுதல்.
2) தூரத்தில் வரும் கடற்கப்பலின் பாகங்கள் படிப்படியாகத் தென்படுதல்.
3) எமது பிரயாணத்தின் பின் மீண்டும் பழைய இடத்திற்கு வந்து சேருதல்.

**14. பூமிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு.**

இதனை மெய்ப்படுத்தும் சான்று.

1) மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஈர்க்கப்பட்டு அன்பாக இருத்தல்.
2) மேல்நோக்கி எறியப்பட்ட பொருட்கள் யாவும் மீண்டும் பூமியை வந்தடைதல்.
3) பூமியானது எப்போதும் சூரியனைச் சுற்றி வருதல்.

**15. எங்கள் வீட்டு முற்றத்துத் தேசி மரத்தின் கீழ் ஈரலிப்பாக இருந்தது.**

இதன் மூலம் நாம் எடுக்கக் கூடிய முடிவு.

1) மழை பெய்துள்ளது.
2) கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது.
3) மழை பெய்திருக்கலாம் அல்லது நீர் ஊற்றப்பட்டிருக்கலாம்.

### பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

16. நகரங்களில் வீடு கட்டுவதற்கு அதிகளவில் பயன்படுத்தும் கல்.
    1. சிறுகல் 2. சுண்ணாம்புக்கல் 3. சிமெந்துக் கல் 4. கருங்கல்

17. தளபாடங்கள் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மரம்.
    1. பலாரமரம் 2. புளியமரம் 3. தென்னைமரம் 4. தேக்குமரம்

18. கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயணத்தின்போது அதிகளவில் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம்.
    1. மாட்டுவண்டி 2. விமானம் 3. படகு 4. துவிச்சக்கர வண்டி


19. சில நகரங்களில் சிறுமழை பெய்ததுமே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இதற்குக் காரணம்.
    1. நெருக்கமான வீடுகள்
    2. நீர் வடிய மண் இன்மை
    3. அதிகரித்த சனத்தொகை
    4. வடிகாலமைப்புச் சீரின்மை


20. தாவரம் ஒன்றின் பழங்கள், வித்துக்கள் மயிர்களை, முட்களை, சதைப்பிடிப்பான பகுதியை, ஒட்டும் தன்மையைக் கொண்டிருப்பதன் பிரதான காரணம்.
    1. விலங்குகளைக் கவர்தல்
    2. விலங்குகளில் ஒட்டுதல்
    3. பரம்பலடைதல்
    3. விலங்குகளைக் குத்துதல்






**21-23 வரையிலான வினாக்களுக்கு இடது பக்கத்தில் உள்ள காகித அட்டைத் துண்டுகளைப் புள்ளிக் கோடுகளினூடாக வெட்டி மடித்து ஒட்டுவதன் மூலம் வலது பக்கத்தில் உள்ள ஒரு திண்மத்தைச் செய்யலாம். அவ்வாறு செய்யக்கூடிய திண்மத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

21. 

22. 

23. 

**24 தொடக்கம் 25 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

24. 



அருகேயுள்ள பகுதியுடன் தொடர்புடைய திணைக்களம்.
1. கல்வி 2. சுகாதாரம்
3. தபால் 4. தொலைத்தொடர்பு

..........................................

25. மேலே காட்டப்பட்டுள்ள பகுதி எந்தப் பிரதேசத்தில் உள்ள அலுவலகத்திற்கு உரியது.
    1. யாழ்ப்பாணம் 2. மன்னார் 3. திருகோணமலை 4. வவுனியா


**மிகவும் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

26. முதலாவதாகத் தரப்பட்ட உருவுடன் நெருங்கிய தொடர்பற்ற உரு எது?




(1) (2) (3) (4)

27. முதலாவதாகத் தரப்பட்ட தள உருவுடன் தொடர்புடைய திண்ம உரு எது?



(1) (2) (3) (4)

28. முதலாவதாகத் தரப்பட்ட உருவை மூடுவதற்குப் பயன்படுத்த முடியாத உரு எது?




(1) (2) (3) (4)

29. முதலாவதாகத் தரப்பட்ட எண்ணுடன் தொடர்புடைய எழுத்து.




(1) (2) (3) (4)